# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2053 மாசி / ஃபிப்ரவரி 2022 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


தேசத்தின் குரல்

## இந்துத்துவத்தின் பிண அரசியலும் மத அரசியலும்




தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே மைக்கேல்பட்டியில் தூய இருதய பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த இலாவண்யா என்ற மாணவி சென்ற சனவரி 9ஆம் நாள் நஞ்சுண்டு தற்கொலை முயற்சி செய்து மருத்துவமனையில் சேர்க்கப்பெற்று 19ஆம் நாள் உயிரிழந்தார். வருத்துக்குரிய இந்த

## உள்ளே...


1. தேசத்தின் குரல் - 1
2. எம். தியாக்கோவ் கட்டுரை தமிழாக்கம் - தொடர்ச்சி இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் (4) - 8
3. பாஜக-விடம் எதிர்பார்க்கலாமா? - 18
4. பொருளாதார ஆய்வறிக்கை 2021-22 - 29
5. இந்திய ஒன்றியத்தின் நிதிநிலை அறிக்கை 2022-23 - 36
6. ஐக்கிய நாடுகள் அவையின் வரி நெறிமுறை - 46



பதிவு எண் :R.Dis. No. 1964/2014




உயிரிழப்பின் காரணம் என்ன? என்பது அரசியல் களத்தில் பெரிய விவாதப் பொருள் ஆகியுள்ளது, பாசகவால் அப்படி ஆக்கப்பட்டுள்ளது.

இலாவண்யா தஞ்சாவூர் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போதே அவரது தற்கொலை முயற்சி பற்றிய காவல்துறைப் புலனாய்வு தொடங்கி, முறைப்படி மரண வாக்குமூலமும் நீதித்துறை நடுவரால் பதிவு செய்யப்பட்டது. இலாவண்யா இறந்த பின் திடீரென்று அவரது மரண வாக்குமூலம் என்று ஒரு சிறு காணொலியை பாசக மாநிலத் தலைவர் அண்ணாமலை வெளியிட்டார். அதில் விடுதிக் காப்பாளர் அருட்சகோதரி சகாய மேரி தன்னையும் தன் குடும்பத்தினரையும் கிறித்துவ மதத்தில் சேர்க்க விரும்பியிருக்கக் கூடும் என்று இலாவண்யாவைப் பேச வைத்திருந்தனர். இதைத் தவிர முன்னும் பின்னும் அவரிடம் என்ன கேட்கப்பட்டது, என்ன விடை சொன்னார் என்பதெல்லாம் மறைக்கப்பட்டு விட்டது.

முறையாக நீதித்துறை நடுவர் பதிவு செய்த மரண வாக்குமூலத்தில் இப்படி எந்தக் குறிப்பும்


பள்ளி மாணவி தற்கொலை: விடுதி வார்டன் கைது

மதமாற்ற முயற்சியா? தடையை மீறி போராட்டம்

இல்லை. இலாவண்யா தற்கொலைக்கு மாற்றாந்தாய் கொடுமையே காரணமாக இருக்க வாய்ப்புண்டு. விடுமுறை நாட்களிலும் கூட அவர் வீடு செல்லாமல் விடுதியிலேயே தங்கியிருந்துள்ளார். எது காரணமானாலும் மதமாற்ற முயற்சி ஏதும் காரணமில்லை. புலனாய்வு செய்த காவல்துறையும் இவ்வாறு அறிவித்து விட்டது.

ஆனால், பாசகவினரோ கிறித்துவப் பள்ளி மேலாண்மை மதமாற்றம் செய்ய முற்பட்டதே தற்கொலைக்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டிக் கூச்சலிட்டனர். மைக்கேல்பட்டியில் மட்டுமன்று, தமிழ்நாடு முழுக்க கிறித்துவக் கல்வி நிறுவனங்கள் அனைத்துமே மதமாற்ற முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லி கிடுகிடு போராட்டங்களை முன்னெடுத்தனர். இலாவண்யாவின் தந்தை முருகானந்தத்தின் பெயரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத்



தொடர்ந்து சிபிஐ புலனாய்வுக்கு வழிசெய்தனர். இலாவண்யாவின் பெற்றோரையும் ஊராரையும் கையில் போட்டுக்கொண்டு இலாவண்யாவின் பிணத்தை வைத்து அரசியல் செய்வதற்காக தங்கள் 'கைச்சரக்கு' முழுவதையும் தில்லிச் செல்வாக்கையும் களமிறக்கினர்.

பாசக ஆர்எஸ்எஸ் கும்பல் இதற்காகவே கதைகட்டிப் பரப்பியது: ஈராண்டு முன்பு இயேசு சபையினரான பள்ளிப் பொறுப்பாளர்கள் இலாவண்யாவையும் பெற்றோரையும் மதம் மாறச் சொன்னார்களாம். அவர்கள் மறுத்து விடவே இலாவண்யாவைக் குறிவைத்துத் துன்புறுத்தினார்களாம். விடுதி அறைகளைப் பெருக்கித் தூய்மை செய்யச் சொன்னார்களாம். தொடர்ந்து திட்டிக் கொண்டே இருந்தார்களாம். தொல்லை பொறுக்க முடியாமல் இலாவண்யா தன்னைத்தானே மாய்த்துக் கொண்டாராம்.

மைக்கேல்பட்டி மக்களிடம் பாசகவின் கட்டுக்கதை எடுபடவில்லை. இலாவண்யா படித்த பள்ளியின் அருமை தெரிந்தவர்கள் சாதிமதம் கடந்து பாசக முயற்சிகளை முறியடிப்பதில் முன்னுக்கு நின்றனர். பாசகவின் பிண அரசியலை எதிர்த்து முறியடிப்பதில் தமிழ்நாட்டின் குடியாட்சிய ஆற்றல்கள் ஒன்றுபட்டு நின்றன. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமும்



தன்னாலியன்ற சிறு பங்காற்றியது.

பாசக தன் பிண அரசியலுக்கு அடிப்படையாகக் கொண்ட அந்தக் காணொலியை பாசக மாநிலத் தலைவர் அண்ணாமலைதான் வெளியிட்டார். சரியாகச் சொன்னால் தயாரித்து வெளியிட்டார். வெட்டிக் குறைத்து ஒரு துண்டை மட்டும் வெளியிட்டார். அந்தக் காணொலியை உடனடியாகப் புலனாய்வுக் காவல்துறையினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது முன்னாள் இ.கா.ப. (IPS) அதிகாரியான அவருக்குத் தெரியாமலிருக்க முடியாது. அப்படிச் செய்யாமல் அதனைச் சமூக ஊடகத்தில் வெளியிட்டார். எப்போது? இலாவண்யா இறந்த பிறகு வெளியிட்டார்.

அண்ணாமலை வகையறா ஈறைப் பேனாக்கிப் பேனைப் பெருமாளாக்கித் தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்தி அரசியல் ஈட்டம் பெற முயல்வது கண்கூடாகத் தெரிகிறது. இலாவண்யா சாவு கிறித்துவக் கல்விக்கூட நிர்வாகங்கள் இந்துக் குழந்தைகளை மதமாற்றம் செய்து கிறித்துவர்களாக்க முயல்வதைக் காட்டுகிறதாம்! இந்த முயற்சிக்கு 'இந்து விரோத' திமுக அரசு உடந்தையாம்! எனவே மதமாற்றத் தடைச் சட்டம் இயற்ற வேண்டுமாம்!

இந்திய அரசமைப்பின் படி மதம் மாறுவதும் மாற்றுவதும் குற்றமில்லை. ஒரு மதத்திலிருந்து

பிறிதொரு மதத்துக்கு மாறுவது மட்டுமன்று, மதமே வேண்டாம் என்று விலகிக் கொள்ளவும் உரிமை உண்டு. இது இயல்பாயமைந்த மாந்த உரிமை மட்டுமன்று, இந்திய அரசமைப்பு அறிந்தேற்றுள்ள உரிமையும் ஆகும். அரசமைப்பின் சிற்பி என்று அனைவராலும் மதிக்கப்பெறும் அண்ணல் அம்பேத்கரே இலட்சக்கணக்கான ஆதரவாளர்களோடு பௌத்த மதத்துக்கு மாறினார் அல்லவா? இந்த மதமாற்றம் இந்திய அரசமைப்பை மீறியது, சட்டத்துக்குப் பகையானது என்று இன்று வரை யாராவது குற்றஞ்சாட்டியதுண்டா? குறை கூறியதுண்டா? மென்மையாகக் கூட குற்றாய்வு செய்ததுண்டா?

காந்தியும் நேருவும் விடுத்த அழைப்பை ஏற்று அவர் அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவுக்குத் தலைவரான போதே, இந்துவாக சாக மாட்டேன் என்று உறுதியேற்றிருந்தார், உண்மையில் பௌத்தம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார் என்பது உலகறிந்த செய்திதான். .

அம்பேத்கருக்குத் தெரியாத அரசமைப்புச் சட்டம் அண்ணாமலைக்குத் தெரிந்து விட்டதா? இந்திய அரசமைப்பில் பொறிக்கப்பட்டுள்ள சமய விடுமை (மத சுதந்திரம்) என்பது மதத்தைக் காட்டிக் கொள்வதற்கும் கடைப்பிடிப்பதற்கும் பரப்புவதற்குமான (profess, practice and propagate) உரிமைகளைத் தன்னகத்தே கொண்டதாகும். பரப்பும் உரிமை என்பதில் மதமாற்றும் உரிமையும் அடங்கும். இதுதான் முறையான சட்ட விளக்கம். இது கட்டாய மதமாற்றம் செய்வதற்கான உரிமையில்லை என்பதைக் கூறத் தேவையில்லை. மத மாற்றம் மட்டுமல்ல, எந்த மாற்றத்தைக் கட்டாயப்படுத்திச் செய்தாலும் குற்றம்தான்.

அரசமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள இந்த மத மாற்ற உரிமைக்கு எதிராகத்தான் பத்து மாநிலங்களில் மதமாற்றத் தடைச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. 1977 ஸ்டானிஸ்லாவ் வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றமும் மதமாற்றத் தடைச் சட்டம் செல்லும் என்று சப்பை கட்டியிருப்பது பெரிய கொடுமை! உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பைப் பற்றி "நீதிபதிகள் பெருந்தீங்கு செய்து விட்டார்கள்" என்று சிறந்த அரசமைப்புச் சட்ட வல்லுநரான சீர்வாய் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஒடுக்குண்ட மக்கள் சாதிக் கொடுமைகளுக்கு ஆறுதல் தேடி அடக்கலம் புகுவதற்கு மதமாற்றம் பயன்பட்டிருப்பது உண்மை. மதம் ஆறுதலற்ற உலகின் ஆறுதல் என்பதையே தமிழ்நாட்டின் பட்டறிவும் உணர்த்துகிறது. இதுவே தீர்வு என்று சொல்ல மாட்டோம். ஆனால் மதமாற்றம் என்னும் ஆறுதலைத் தேடிக் கொள்ளும் உரிமையைக்கூட ஒடுக்குண்ட மக்களுக்கு மறுப்பதுதான் பாசக - ஆர்எஸ்எஸ் கோரும் மதமாற்றத் தடைச் சட்டத்தின் நோக்கமும் விளைவும் ஆகும். இன்றளவும் கிறித்துவத்துக்கு மாறிய தாழ்த்தப்பட்ட பட்டியலின மக்களுக்கு இட ஒதுக்கீட்டுரிமை மறுக்கப்படுவது காட்டுவதென்ன? அவர்களை இந்துக்களாக இருக்கும்படி அல்லது மாறும் படி சட்டம் கட்டாயப்படுத்துகிறது என்பதுதானே? இது கட்டாய மதமாற்றம் இல்லையா? .

ஆர்எஸ்எஸ் கும்பல் இல்லந்திரும்புதல் ("கர் வாப்பசி") என்ற பெயரில் நடத்துவது மதமாற்றம் இல்லையா? வருண சாதி முறைமையை உயிர்நாடியாகக் கொண்ட 'இந்து தர்மத்தை'க் காப்பது என்றால் சாதி காத்தல், சமூக ஒடுக்குமுறை காத்தல், தீண்டாமை காத்தல் என்று பொருள். மதமாற்ற உரிமை என்பது சமூக நீதிக் கொள்கையின் ஒரு கூறு ஆகும். மதமாற்றத் தடைச் சட்டம் என்பது சமூகநீதிக்குத் தடை போடும் சட்டமாகும். சமூக நீதியை மறுக்கவே இந்துத்துவக் கும்பல் மதமாற்றப் பூச்சாண்டி கிளப்புகிறது.

தமிழ்த் தேசம் ஒன்றுபட்டு நின்று விழிப்புக் காத்து, இந்துத்துவத்தின் பிண அரசியலையும் மத அரசியலையும் புறங்காண வேண்டும்.

***ஏ.எம் .தியாக்கோவ்*** கட்டுரை தமிழாக்கம் – தொடர்ச்சி

# இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல்(4)




*[1939-1949 காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிப்போக்குகள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்ட சோவியத்து இந்தியவியலர்களில் முதன்மையானவர் ஏ.எம். தியாக்கோவ். அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் 1952இல் சோவியத்து (குமுகியக் குடியரசுகள்) ஒன்றியத்தின் (USSR) கீழையியல் ஆய்வுக் கழகத்தால் வெளியிடப்பட்டன. இவற்றில் ஒன்றுதான் "இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் பற்றி" தியாக்கோவ் எழுதிய கட்டுரை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான காலத்தில் இந்தியாவின் தேசிய இனச் சிக்கல் குறித்து அவர் செய்த முகன்மையான ஆய்வின் முடிவுகள் இந்தக் கட்டுரையில் இடம்பெறுகின்றன. தியாக்கோவின் கருத்துரைகளை இந்தியப் பொதுமை இயக்கம் பொருட்படுத்தாமல் விட்டு விட்டது. இப்போதும் கூட இந்தியத் துணைக்கண்டத்தில் தேசிய இனச்சிக்கலைப் புரிந்து கொள்ள தியாக்கோவின் பார்வைகள் துணைசெய்யக் கூடியவை*

*என்பதால் அவரது கட்டுரையை இங்கு தமிழாக்கம் செய்து வெளியிடுகிறோம். இந்தக் கட்டுரையின் முதல் மூன்று பகுதிகளை 2021 நவம்பர், திசம்பர், 2022 சனவரி இதழ்களில் வெளியிட்டோம். இதோ அதன் தொடர்ச்சி:]*

# பாகிஸ்தானில் தேசிய இனச் சிக்கல்

தேசிய இனச் சிக்கலானது இந்திய ஒன்றியத்தில் போலவே பாகிஸ்தானிலும் முகமை வாய்ந்ததாகும். பாகிஸ்தான் உருவான போதே, இந்தியாவின் ஆஃப்கானிய ஆள்புலங்களை இணைத்துக் கொள்ளும் சிக்கலில் முசுலிம் லீகுக்கும் ஏனைய அரசியல் அமைப்புகளுக்கும் இடையே கூரிய முரண்பாடு வெளிப்பட்டது. மேற்கூறியது போல, செஞ்சட்டை அமைப்பும் அதன் நேச அமைப்புகளும் தங்களின் ஆள்புலங்களைப் பாகிஸ்தானில் இணைத்துக் கொள்வதை எதிர்த்ததோடு, இந்தியாவின் ஆஃப்கானிய ஆள்புலங்களிலிருந்து ஒரு தற்சார்பான பத்தானிய அரசு - புஷ்தூனிஸ்தான் அல்லது அல்லது பத்தானிஸ்தான் - அமைக்குமாறு கோரின. .

ஆகவே வட மேற்கு எல்லை மாகாண ஆள்புலங்களை பாகிஸ்தானில் இணைத்துக் கொள்ளும் சிக்கல் குறித்து 1947இல் நடைபெற்ற பொதுவாக்கெடுப்புக்கான வினாக்களின் பட்டியலில் பத்தானிஸ்தான் அமைக்கும் வினாவைச் சேர்த்துக் கொள்ள பிரித்தானிய அரசாங்கம் மறுத்து விட்டதால் ஆஃப்கானிய அமைப்புகள் அந்தப் பொதுவாக்கெடுப்பைப் புறக்கணித்தன. தற்சார்பான ஆஃப்கானிய அரசு வேண்டுமென்னும் கோரிக்கை வசீர்கள், அஃப்ரிதிகள் போன்ற பழங்குடிகள் வாழும் எல்லைப் பகுதியில் பேராதரவு பெற்றிருந்தது. பிரித்தானிய ஆட்சியாளர்களும் முசுலிம் லீகும், பிறகு பாகிஸ்தான் ஆட்சியாளர்களும் எல்லா வகையிலும் சூழ்ச்சிகள் செய்த போதிலும் பத்தானிஸ்தான் அமைப்பதற்கான இயக்கம் புதிய அரசியங்கள் ([இந்தியா, பாகிஸ்தான் ஆகிய] டொமினியன்கள்) உருவான பிறகுங்கூட ஓயவில்லை. இந்த இயக்கத்துக்கு ஆஃப்கானிஸ்தான் ஆட்சியாளர்கள் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தனர். குறிப்பாக எல்லைப் பழங்குடிகளை பாகிஸ்தானில் இணைத்துக் கொள்வதற்கு வெகுவலுவாக எதிர்ப்புத் தெரிவித்தனர். எல்லைப் பழங்குடிகள் வதியும் நிலப்பரப்பைக் கட்டுப்படுத்த ஆங்கில-அமெரிக்கப் படைக்கு பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் வழி விடுமாறு கட்டாயப்படுத்துவதற்குப் பத்தானியர் இயக்கத்தை பிரித்தானிய, அமெரிக்க வல்லரசியர்கள் ஓரளவு பயன்படுத்திக் கொண்டனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் முதன்மையாக இந்த இயக்கம் இந்தியாவைப் பிரிவினை செய்யும் பிரித்தானியத் திட்டத்துக்கு

மட்டுமன்று, பாகிஸ்தானை பிரித்தானியரின் ஏவலாளாகப் பயன்படுத்துவதற்கும் எதிராக நடத்தப்பட்ட மக்களியக்கம் ஆகும்.

வடமேற்கு எல்லை மாகாணத்திலும், இந்திய மேலுரிமைக்குட்பட்ட ஆஃப்கானிய சமத்தான மாநிலங்களிலும், குறிப்பாகத் தற்சார்புப் பழங்குடிகள் எனப்பட்டோரின் நிலப்பரப்பிலும் பிரித்தானிய எதிர்ப்பியக்கம் அப்பகுதிகள் பிரித்தானிய இந்தியப் பேரரசில் இணைக்கப்பட்ட காலத்திலிருந்து ஓயவே இல்லை. பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதே எப்போதும் இந்திய ஆஃப்கானியர்களது போராட்டத்தின் இறுதி நோக்கமாக இருந்தது. 1919ஆம் ஆண்டில் பிரித்தானியருக்கு எதிரான ஆஃப்கானிய விடுதலைப் போரின் போது இந்திய ஆஃப்கானியர்களிடையே ஆஃப்கானிஸ்தான் பால் பரிவு பெருக்கெடுத்தது. ஆனால் 1929இல் ஆஃப்கானிஸ்தானில் பிரித்தானிய வல்லரசியர்களுடன் உடன்பாடு நாடிய ஒரு பிற்போக்கு ஆட்சி அமைக்கப்பட்ட பிறகு, இந்திய ஆஃப்கானியர்கள் காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான தமது போராட்டத்தில் வேறு கூட்டாளிகளைத் தேடலாயினர். குறிப்பாகச் சொன்னால், இந்திய ஆஃப்கானியர்களது தேசிய இயக்கத்தின் பிரித்தானிய எதிர்ப்புப் பாதைதான் - இந்திய முதலியத் தேசியத்தின் பால், அல்லது இன்னுங்கூட காந்தியத்தின் பால் கொண்ட பரிவு அன்று - ஆஃப்கானியத் தேசிய இயக்கத்துக்கும் தேசிய காங்கிரசுக்கும் இடைப்பட்ட உறவுகளுக்கு விளக்கமாகிறது. .

செஞ்சட்டைப் படையின் தலைவர்களில் உயர் மட்டத்தினர் மட்டுமே - முதன்மையாக அப்துல் காஃபர்கான், கான் சாகிப் போன்றவர்களே - மெய்யான காங்கிரசாராகவும் காந்தி ஆதரவாளர்களாகவும் இருந்தனர். அவர்களைப் பின்பற்றிய செஞ்சட்டைப் படையில் பெரும்பகுதியினருக்கு தேசிய காங்கிரசோடு பெரிதாகப் பொதுத்தன்மை ஏதுமில்லை. காந்தியத்தோடு அந்த அளவுக்குக் கூட இல்லை. இவர்கள் ஆஃப்கானிய உழவர்கள், பிரித்தானியரிடமிருந்து விடுதலை பெற ஆவலுற்றவர்கள், தேசிய காங்கிரசு இந்தியாவின் முழு விடுதலையைத் தன் இறுதியிலக்காகப் பறைசாற்றியதால் மட்டுமே அதனோடு கூட்டாளி ஆனவர்கள். முசுலிம் லீக் எப்போதுமே பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் நெருங்கிய பிணைப்புடையது, அதே காரணத்தால் இந்திய ஆஃப்கன்கள்-பத்தானியர்கள் போன்ற தீவிர முசுலிம்களிடையே ஒருநாளும் ஆதரவு பெற்றதில்லை. இந்தியாவின் ஆஃப்கானிய ஆள்புலங்களை பாகிஸ்தானுக்குள் சேர்ப்பதெனும் வினா எழுந்த போது ஆஃப்கானியர்களில் பெரும்பான்மையினர் அதனை எதிர்த்து நின்றனர்.

பாகிஸ்தானில் அப்துல் காஃபர் கான் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பெற்ற கட்சி பாகிஸ்தானை 'குமுகியக் குடியரசுகளின்' (குமுகியம் = சோசலிசம்) கூட்டாட்சியாக மாற்றியமைப்பதே இலக்கென்று பறைசாற்றியது. இந்த வேலைத்திட்டம் வெறும் வாய்வீச்சுதான் என்பதில் ஐயமில்லை. அப்துல் காஃபர் கானுக்கும் குமுகியத்துக்கும் எக்காலத்தும் எவ்விதப் பொதுத்தன்மையும் இருந்தில்லை. ஆனால் அவர் பாகிஸ்தான் அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்தார். விரைவில் அவரும் அவரை ஆதரித்தோரும் - ஆஃப்கானிய தேசியர்கள் - சிறையிலடைக்கப்பட்டனர். இதற்குப் பிறகும் கூட பத்தானிஸ்தானுக்கான இயக்கம் தொடர்ந்தது. ஆனால் அடக்குமுறை காரணமாக, இயக்கத்தின் மையம் எல்லைப் பழங்குடிகளின் நிலப்பரப்புக்கு, குறிப்பாக வசிரிஸ்தானுக்கு மாறியது. நன்கறியப்பெற்ற ஃபக்கிர் இப்பி பத்தானிஸ்தான் அமைப்பதற்காக முனைந்து பாடாற்றினார். 1951இல் பத்தானியச் சிக்கல் பாகிஸ்தானில் நீடித்த கடுஞ்சிக்கல்களில் ஒன்றாகவே இருந்து வந்தது..

1948இல் பாகிஸ்தானில் சிந்துச் சிக்கல் தலைதூக்கிற்று. கராச்சி நகரம் பாகிஸ்தானின் இடைக்காலத் தலைநகரமாக்கப்பட்டது. கராச்சி நகரம் பாகிஸ்தானின் இடைக்காலத் தலைநகரம் ஆக்கப்பட்டது. பிறகு அதையே நிலையான தலைநகரம் ஆக்கவும் முடிவெடுக்கப்பட்டது. பாகிஸ்தானின் ஆகப் பெரிய நகரமும் பஞ்சாபின் வரலாற்று மையமும் ஆன லாகூர் 1947 ஆகஸ்டு-செப்டெம்பர் கலவரங்களின் போது பெரிதும் பாதிப்புற்றதோடு, மிகவும் கொந்தளிப்பான இடமும் ஆயிற்று. கராச்சியை பாகிஸ்தானின் தலைநகரமாக அறிவிப்பதோடு, சிந்து மாகாணத்திலிருந்து பிரித்து ஒரு தன்னாட்சி அலகும் ஆக்கும் திட்டம் சிந்து மக்களைச் சீற்றங்கொள்ளச் செய்தது. ஏனென்றால் சிந்திகள் கராச்சியைத் தங்கள் தேசியத் தலைநகராக மதித்தார்கள். சிந்து நிலத்தை பஞ்சாபில் சேர்க்கும் நகர்வு தங்கள் தேசிய வேணவாவிற்கு ஊறு செய்யும், தங்களைப் பஞ்சாபியரைச் சார்ந்து நிற்கும் நிலைக்கு உள்ளாக்கும் என்று எண்ணியதால் எப்போதும் இவ்வாறான எல்லாத் திட்டங்களும் அவர்களைக் கொதிப்புற செய்தன.

பாகிஸ்தானில் சிந்திகளுக்குப் பெரிய செல்வாக்கு இல்லை. அவர்களுக்கான தலைமையில் இந்திய ஒன்றியத்திலிருந்து வந்து குடிபுகுந்த முசுலிம்களோ பஞ்சாபியர்களோதான் பெரும்படியாக உள்ளனர். உழைக்கும் சிந்து வெகுமக்கள் அவ்வளவாக அமைப்புவழித் திரண்டிருக்கவில்லை. தொழிலாளர் வகுப்பு சிற்றளவாகவே உள்ளது. உழவர்கள் பின்தங்கிய

நிலையிலும், நிலக்கிழார்களால் ஒடுக்குண்ட நிலையிலும் உள்ளனர். இந்த நிலக்கிழார்கள் பாகிஸ்தான் ஆட்சியாளர்களோடு எவ்வகையிலும் மோதிக் கொள்ள விரும்பாதவர்கள். முதன்மையாக இந்துக்களான சிந்துநில வணிக முதலாளர் வகுப்பு முன்னர் பஞ்சாபில் சிந்து ஒன்றிணைக்கப்படுவதை வன்மையாக எதிர்த்தது என்றாலும் இப்போது குரலுயர்த்த அஞ்சுகிறது.
.

வங்காளச் சிக்கல் பாகிஸ்தானுக்குப் பெரிதும் முகமை வாய்ந்தது. பாகிஸ்தானின் மக்கள்தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் வங்காளிகள். பாகிஸ்தான் தேசிய இனங்களில் ஆகப் பெரிதும் முன்னேறியவர்கள் அவர்களே. கிழக்கு பாகிஸ்தான் வங்காளிகளுக்கு மேற்கு பாகிஸ்தானுடன் பொருளியல் வகையிலோ பண்பாட்டு வகையிலோ எவ்விதப் பிணைப்பும் இல்லை. அதனால்தான் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் வங்காளம் உள்ளிட்ட பாகிஸ்தானில் உருதுவை ஒற்றை அரச மொழியாக நுழைத்தும், அனைத்திசுலாமியப் பரப்புரையைத் தீவிரமாக்கியும் வங்காளத்தை பாகிஸ்தானுடன் கட்டிப்போட விரும்பினார்கள். ஒரு பொது மதமும் ஒரு பொது மொழியும் கிழக்கு பாகிஸ்தானை மேற்கு பாகிஸ்தானுடன் ஒன்றாக்கப் போதுமானதாய் இருக்கும் என்று பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் நினைத்தார்கள். ஆனால் மக்கள் மீது அயல்மொழியைத் திணித்துத் தன்வயமாக்கும் பிற்போக்கு முயற்சி தோற்றுப் போயிற்று. ஜின்னாவின் வாழ்நாளிலேயே, 1948 தொடக்கத்தில், உருதுவை பாகிஸ்தான் முழுமைக்குமான கட்டாய அரச மொழியாக அறிவிக்க பாகிஸ்தான் அரசமைப்புப் பேரவை செய்த முடிவு டாக்காவில் அரசு ஊழியர்களிடையிலும், சிறப்பாக மாணவர்களிடையிலும் பெருங்கிளர்ச்சிகளில் போய் முடிந்தது. வங்க மொழியை கிழக்கு பாகிஸ்தானில் அரச மொழியாக்க வேண்டும், பல்கலைக் கழகங்களில் கல்விபுகட்டுதலும் அரசத் துறைகளிலும் மாகாணத் துறைகளிலும் அலுவலகப் பணியும் வங்க மொழியில் நடத்தப்பட வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கோரினார்கள்..

வங்காளிகள் மீது உருது மொழியைக் கட்டாய அரச மொழியாகத் திணிக்கும் கொள்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் கண்டனக் கூட்டங்களும் நடைபெற்றன. காவல்துறையோடு மோதல்களும் கூட இடம்பெற்றன. இந்தக் கிளர்ச்சிகளால்தான் ஜின்னா கிழக்கு வங்காளத்துக்குச் சென்று, உருது மொழியை பாகிஸ்தான் முழுவதன் மொழியாக ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டி மாணவர்களிடம் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அப்போது, இது வங்காள மொழிக்கு

ஊறு செய்யாது, அது மாகாணத்தின் ஆட்சிமொழியாக மதிக்கப்படும் என்று ஜின்னா அறிவித்தார்.

வங்காளச் சிக்கல் என்பது மொழியோடு முடியவில்லை. 1949 மார்ச்சு மாதம், பாகிஸ்தான் அரசமைப்புப் பேரவையில் கிழக்கு வங்காளப் பேராளர்கள் நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களில் பாகிஸ்தான் நடுவணரசின் கொள்கைக்கு வலுத்த எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஏனென்றால் கிழக்கு வங்காளத்தை இந்தக் கொள்கை இயற்கை வளங்களைத் தோண்டியெடுக்கும் இடமாகப் பார்த்ததே தவிர, அதன் வளர்ச்சியில் அக்கறை கொள்வதாக இல்லை.

ஒரு 40 ஆண்டுக் காலத்தில் இந்து-முசுலிம் படுகொலைகள் தூண்டி விடப்பட்டதால் செயற்கையாக நலிவுறச் செய்யப்பட்ட வங்காளத் தேசிய வளர்ச்சி மேற்கு பாகிஸ்தானிலும் சரி, கிழக்கு பாகிஸ்தானிய வங்காளத்திலும் சரி, மீண்டும் உந்தம் பெறத் தொடங்கி வருகிறது. வங்காளத்தில் தேசிய மற்றும் உழவர் இயக்கம் தீவிரமடைவதே 1950 பிப்ரவரியில் இரு பகுதிகளிலும் இந்து-முசுலிம் படுகொலைகள் தூண்டி விடப்படுவதற்குக் காரணமாக இருக்கக் கூடும். இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் ஆளும் கும்பல்கள் தங்களின் பிரித்தானிய ஆசானை வழிகாட்டியாகக் கொண்டு வங்காளிகளின் மக்கள் இயக்கத்தைக் குருதி வெள்ளத்தில் மூழ்கடிக்க முயன்று வருகின்றன. .

பாகிஸ்தானை ஆளும் கும்பல் தேசிய இன மாகாணங்களின் தன்னாட்சிக் கோரிக்கைகளுக்கும், பத்தானியர்கள், வங்காளிகளின் விடுதலை இயக்கத்துக்கும் எதிராக அனைத்து இசுலாமியக் கொள்கைப் பரப்புரையையும் சரியத்தையும் அனைத்து முசுலிம்களின் ஒற்றுமையையும் பாகிஸ்தான் முழுவதற்கும் அரச மொழியாக உருதுவைத் திணிப்பதையும் முன்னிறுத்த முயன்று வருகிறது. ஆனால் அனைத்து இசுலாமியப் பரப்புரை இப்போதும் பாகிஸ்தானின் தேசிய இனங்களிடையே சற்றே தாக்கம் கொள்கிறது என்றால், உருதுவை பாகிஸ்தான் முழுவதற்கும் அரச மொழியாக்கும் முயற்சி தேசிய இயக்கத்தை வலுவாக்கவே செய்கிறது.

கிழக்கு வங்காளத்துக்கும் மேற்கு பாகிஸ்தானுக்கும் இடையே பண்பாட்டுப் பிணைப்புகளும் பொருளியல் பிணைப்புகளும் இல்லாமையால் பாகிஸ்தான் மிக மிக நிலையற்ற அரசாகியுள்ளது. ஆனால், தென்கிழக்கு ஆசியாவில், குறிப்பாக பாகிஸ்தானின் அண்டை நாடாகிய பர்மாவில் தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னேற்றம் வங்காளத்தில் தேசிய விடுதலைக்கான மக்களினங்களின் இயக்கத்தைத் தீவிரமாக்க ஒரு குறிகை (சமிக்ஞை)

ஆகலாம்.

ஆக, இந்தியப் பிரிவினைக்குப் பிறகு இந்திய ஒன்றியத்தில் மட்டுமல்லாமல் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் அரசியல் வாழ்வின் ஆகப் பெரும் உயிர்ச்சிக்கல்களில் ஒன்றாகியுள்ளது.

இந்திய ஒன்றியத்திலும் சரி, பாகிஸ்தானிலும் சரி, உந்தமும் வீச்சும் பெற்று வரும் தேசிய (இன) இயக்கத்தை ஆராய்ந்து பார்த்தால் நாம் பின்வரும் முடிவுகளை அடையலாம்:

தேசிய (இன) இயக்கம் வளர்ந்து வருகிறது என்றாலும் இது சமச்சீரான வளர்ச்சி இல்லை. மராத்தியர்கள், மலையாளிகளின் ஆள்புலங்களிலும், குறிப்பாக ஆந்திரத்திலும் உழைக்கும் மக்களின் பரந்துபட்ட பிரிவுகள் இவ்வியக்கத்தில் பங்கேற்று வருகின்றன, இது வலுவான பரிமாணங்களை அடைந்துள்ளது. இவ்வியக்கம் வங்காளத்திலும் கர்நாடகத்திலும் தமிழ்நாட்டிலும் சற்றே வலுக்குன்றியுள்ளது. குசராத்தில் இன்னுங்கூட வலுக்குன்றியுள்ளது. ஆகவே நாட்டுப்புறத்தில் கிழாரிய உறவுகளின் எச்சங்கள் கூடுதலாக இருந்தாலும் முதலியம் அதே நேரத்தில் உயர்ந்து வரும் வட்டாரங்களில்தான் இயக்கம் மிகவும் முனைப்பாகச் செயல்படுகிறது. .

நன்கு வரையறுத்த தேசியக் கோரிக்கைகள் கொண்ட வளர்ந்த தேசிய இயக்கம் கண்டுள்ள முழு அளவிலோ கிட்டத்தட்ட முழு அளவிலோ அமைந்த தேசங்கள் எப்போதும் தமக்கென வலுவான தேசிய முதலாளர்களைக் கொண்டிருப்பதில்லை. சரியாகச் சொன்னால், தெலுங்கு, மராத்திய மக்களினங்களிடையே தேசிய முதலாளர்கள் வலுக்குன்றியுள்ளனர், அவர்களால் பொருளியலாகவோ அரசியலாகவோ பிரித்தானிய வல்லரசியர்களோடு பிணைய முடியவில்லை என்னும் நிலையில் அவர்களிடையேதான் தேசிய இயக்கம் மிகவும் முனைப்பான வடிவங்கள் எடுக்கிறது. ஆதலால், முதலியத்தின் பொது நெருக்கடிக் காலத்தில் நடைபெறும் தேசிய இயக்கத்தில் பல்வேறு தேசங்களின் முதலாளர்களிடையிலான போட்டி இரண்டாம் நிலைப்பட்ட பங்கு வகிக்கிறது. தேசிய இயக்கமானது தொழிலாளர்களும் உழவர்களும் நகரங்களின் சிறுமுதலிய அடுக்குகளுமான வெகுமக்கள் இந்தியாவில் அயல் வல்லரசியர்கள், நிலக்கிழார்கள், ஆதிக்க முற்றுரிமை முதலாளர்கள் ஆகியோரின் ஒடுக்குமுறைக்கு எதிராக நடத்தும் போராட்டத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாகும். 1925இல் யூகோஸ்லாவியாவில் தேசியச் சிக்கல் பற்றி செமிச் எழுதிய கட்டுரைக்கு மறுமொழியாக ஜெ.வி. ஸ்டாலின் எழுதினார்:

காலனிகளையும் சார்புநிலைத் தேசிய இனங்களையும் சேர்ந்த வெகுமக்கள் நிதிச் சுரண்டலுக்கு

எதிராக, ஆளும் தேசிய இனத்தைச் சேர்ந்த வல்லரசிய முதலாளர் வகுப்பு அந்தக் காலனிகளையும் தேசிய இனங்களையும் அரசியல் வகையில் அடிமைப்படுத்திப் பண்பாட்டு வகையில் சிதைப்பதற்கு எதிராக நடத்தும் போராட்டத்தில்தான் இன்று தேசியச் சிக்கலின் சாறம் பொதிந்துள்ளது. தேசியச் சிக்கலை அவ்வாறு முன்வைக்கும் போது வெவ்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த முதலாளர்களிடையிலான போட்டிப் போராட்டம் எவ்வகையான முகமையுடையதாக இருக்கக் கூடும்? தீர்மானிக்கும் முகமையுடையதாக இருக்க முடியாது என்பது உறுதி. சில நேர்வுகளில் முகமையுடையதாகவே இருக்க முடியாது. ஈண்டு முதன்மைச் செய்தி என்னவென்றால், ஆளும் தேசிய இனத்தின் வல்லரசியக் குழு காலனி நாடுகளையும் சார்புத் தேசிய இனங்களையும் சேர்ந்த பெருந்திரளான வெகுமக்களை, அனைத்துக்கும் மேலாக உழவர் பெருங்கூட்டத்தைச் சுரண்டியும் ஒடுக்கியும் வருகிறது என்பதும், அவர்களைச் சுரண்டி ஒடுக்குவதன் மூலம் வல்லரசியத்துக்கு எதிரான போராட்டத்துக்குள் இழுத்து விடுகிறது, இவ்வாறு அவர்களைப் பாட்டாளியப் புரட்சியின் கூட்டாளிகளாக மாற்றுகிறது என்பதுமே தவிர, ஒரு தேசிய இனத்தின் முதலாளர் வகுப்பு பிறிதொரு தேசிய இனத்தின் முதலாளர் வகுப்பை முறியடிக்கிறது அல்லது முறியடிக்கக் கூடும் என்பதன்று..

இந்திய நாட்டுப்புறத்தில் ஆதிக்கநிலையில் இருக்கும் கிழாரியச் சுவடுகளுக்கு எதிரான - கிழாரிய நிலவுடைமைக்கும் குறுநில மன்னர்களின் ஆட்சிக்கும் கடுவட்டி அடிமைப்படுத்தலுக்கும் எதிரான - உழவர் வெகுமக்களின் போராட்டம் இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் தேசிய இயக்கங்களின் முதன்மை உள்ளடக்கமாக அமைகிறது. தேசிய முதலாளர் வகுப்பு தேசிய இயக்கத்திலும் ஓரளவு தீவிரமாகப் பங்கேற்றது; ஆனால் இந்த இயக்கம் மிகவும் கூரிய வடிவம்கொண்ட வட்டாரங்களில் மட்டும் அது இயக்குவிசையாக இல்லாமற்போனது.

இந்த ஒளியில்தான் ஆந்திர மகாசபை, மகாராட்டிர மாநாடு போன்ற தேசிய அமைப்புகளின் வகிபாகத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டும். அவை முதன்மையாக உழவர்களாலும், அறிவாளர்களில் குடியாட்சிய அடுக்கினராலும், நகர்ப்புற ஏழைகளாலும் ஆனவை. ஆனால் அவற்றில் உயரடுக்குக் குத்தகையாளர்கள், தேசிய முதலாளர்கள் ஆகியோரின் பேராளர்களும் (பிரதிநிதிகளும்) உள்ளனர். இந்த ஒளியில், இந்த அமைப்புகளைக் காட்டிலும் வகுப்பு (வர்க்க) உள்ளடக்கத்தில் ஒருபடித்தான தன்மை கொண்ட உழவர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள்

போன்றவற்றோடு அவற்றை நிகர்ப்படுத்தலாகாது. இந்த அமைப்புகள் இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் மைய அரசின் தேசிய இனக் கொள்கையை எதிர்த்துப் போராடிக் கொண்டே, ஒருவிதத்தில் முற்போக்குப் பங்கு வகிக்கின்றன, தெலங்கானாவில் போன்று, உழவர் எழுச்சியில் முனைப்புடன் கலந்து கொள்ளவும் செய்தன.

ஆனால் பிற்போக்கு ஆற்றல்களின் ஒடுக்குமுறை கூடுதலாகும் நிலையில் அவை எப்போதுமே உடைந்து சிதறக் கூடும், தலைமையில் உள்ள முதலாளர்-குலாக்குப் பிரிவினர் இயக்கத்துக்கு இரண்டகம் செய்யக் கூடும். இந்தியா, பாகிஸ்தான் அரசுகள் பிரித்தானிய வல்லரசியத்திடம் கட்டுண்ட நிலவுடைமையாளர்கள், குறுநில மன்னர்கள், பெருமுதலாளர்களின் அரசுகளாக இருப்பதன் விளைவே அந்த அரசுகளின் பிற்போக்கான தேசியக் கொள்கை ஆகும்.

உருசியாவில் தேசிய ஒடுக்குமுறைக்கான காரணங்கள் பற்றி 1917ஆம் ஆண்டு தோழர் ஸ்டாலின் எழுதினார்:

இதற்குத் தலைக் காரணம் என்னவென்றால், நிலம்படைத்த உயர்குலம் தன் நிலையினாலேயே தேசியத் தன்னுரிமை உட்பட அனைத்துத் தன்னுரிமைக்கும் மிக உறுதியான, விட்டுக்கொடுக்காத பகை ஆகும் (அப்படி இல்லாமல் இருக்க முடியாது!); பொதுவாகத் தன்னுரிமையும், குறிப்பாகத் தேசியத் தன்னுரிமையும் நிலம்படைத்த உயர்குலத்தினது அரசியல் ஆளுகையின் அடித்தளங்களையே ஆட்டங்காணச் செய்கிறவை ஆகும் (அப்படி இல்லாமல் இருக்க முடியாது!).

ஆக, தேசிய ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் தேசியத் தன்னுரிமைக்கும் தேவைப்படும் *உள்ளபடியான* நிலைமைகளைத் தோற்றுவிப்பதற்குமான வழி… கிழாரிய உயர்குலத்தை அரசியல் அரங்கிலிருந்து விரட்டுவதாகும், அதன் கையிலிருந்து அதிகாரத்தைப் பறித்தெடுப்பதாகும்.

இந்திய நாட்டின் நிலக்கிழார்களும், குறுநில மன்னர்களும், முற்றுரிமை முதலாளர்களும், பிரித்தானிய, அமெரிக்க வல்லரசியர்களும் தேசிய ஒடுக்குமுறையின் ஏந்திகளாவர். இதனால், மெய்யாகவே தற்சார்பும் குடியாட்சியமும் கொண்ட இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமான போராட்டத்தில் தேசிய இயக்கங்களின் முகமைப் பங்கு உறுதியாகிறது.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தேசிய இயக்கமும் உழவர் இயக்கமும் உறுதி செய்யும் உண்மை என்னவென்றால், இந்த நாடுகளில் தேசிய இயக்கத்தின் புரட்சிய உள்ளாற்றல் அடியோடு ஒழிக்கப்பட்டு விடவில்லை, தேசிய இயக்கமானது மக்கள்-குடியாட்சியத்துக்கான போராட்டத்தில் பாட்டாளி வகுப்பின் வலுவான கூட்டாளியாக இருக்க முடியும். சீனத்தில் புரட்சியின் கடமைகள் பற்றிப் பேசுகையில் ஜே.வி. ஸ்டாலின் லெனினியத்தின் தந்திரவுத்திக் கொள்கைகளின் அடிப்படையில் எழுதினார்:

லெனினியத்தின் இவ்வாறான தந்திரவுத்திக் கொள்கைகளை நான் மனத்திற்கொண்டுள்ளேன்.

அ) ஒவ்வொரு தனி நாட்டின் தொழிலாளர் வகுப்பு இயக்கத்துக்கான வழிகாட்டு நெறிகளையும் வரைகையில் பன்னாட்டுப் பொதுமையமைப்பு (கொமிண்டர்ன்) அந்தந்த நாட்டிற்கே உரிய தனிச்சிறப்பான, குறிப்பான தேசியத் தன்மைகளைத் தவறாமல் கணக்கில் கொள்ள வேண்டும் என்ற கொள்கை;

ஆ) ஒவ்வொரு நாட்டின் பொதுமைக் கட்சியும் பாட்டாளி வகுப்புக்குப் பெருந்திரள் கூட்டாளியை --- இடைக்காலமான, ஊசலாடும் தன்மையுள்ள, நிலையற்ற, நம்பகமற்ற கூட்டாளி என்றாலும் கூட --- ஈட்டும் ஆகச் சிறு வாய்ப்பையும் கூட தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கொள்கை;

இ) பரந்துபட்ட வெகுமக்களின் அரசியல் கல்விக்குக் கொள்கைப் பரப்புரையும் கிளர்ச்சிப் பரப்புரையும் போதுமானவை அல்ல, வெகுமக்களுக்கு அரசியல் பட்டறிவு தேவைப்படும் என்ற கொள்கை.

தோழர் ஸ்டாலின் முன்னிறுத்திய இந்தக் கடமைகள் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் முழுமையாகப் பொருந்தும்.

*[அடுத்த இதழில்: முடிவுரை]*

# பாஜக-விடம் எதிர்பார்க்கலாமா?

சமந்தா




அதிகரித்து வரும் ஓமைக்ரான் தொற்று அபாயமும், பொருளாதார நெறிகளைப் புரிந்து கொள்ளாத அரசுகளின் செயல்பாடுகளும் உலகளவில் பொருளாதார மீட்சியைச் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளன. கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 90 டாலர் வரை உயர்ந்துள்ளது. அமெரிக்காவில் பணவீக்கம் 7 விழுக்காடு வரை உயர்ந்துள்ளது. எதனால் பணவீக்கம் உயர்ந்துள்ளது என்பது குறித்து ஆங்காங்கே விவாதங்கள் நடைபெறுகின்றன. பணப் புழக்கத்தை அதிகமாக்குவது பணவீக்கத்தை உயர்த்தும் போக்கை ஏற்படுத்தும் என்ற போதும் அது மட்டுமே பணவீக்கம் உயர்ந்ததற்கான காரணமன்று. வழங்கல் பக்கத்தில் விநியோகச் சங்கிலிகளில் நேர்ந்த பாதிப்புகள் சரக்குகளின் விலையேற்றத்தை ஊக்குவித்ததுடன் ஊகவணிகத்தையும் அதிகமாக்கியுள்ளதால் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. ஊக நாணயமான பிட்காயின் மதிப்பு 40 விழுக்காட்டிற்கு மேல் வீழ்ச்சியடைந்துள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்க மத்திய வங்கியான "ஃபெடரல் ரிசர்வ்" பணப் புழக்கத்தைக் குறைக்கும் விதமாக நிதிப் பத்திரங்கள் வாங்குவதைக் குறைத்துள்ளது, மார்ச் மாதத்தில் வட்டி வீதத்தை உயர்த்தப் போவதாகவும் அறிவித்துள்ளது. இதனால் இந்தியா போன்ற வளரும் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளை விற்று விடும் போக்கு அதிகரித்துள்ளதால் பெருமளவு அந்நிய முதலீடுகள் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டில், கொரோனா கொள்ளை நோய்த் தாக்கத்தினால் முடங்கிய பொருளாதாரத்திற்குத் தூண்டுதல் அளிப்பதற்காக அமெரிக்க மத்திய வங்கி வட்டிவீதத்தை சுழியத்திற்குக் குறைத்தது. ஆனால் அது உண்மையான பொருளாதார மீட்சிக்கு வழிவகுக்கவில்லை என்பதோடு நிதிமய நடவடிக்கைகளையும், பங்குச்சந்தைகளையுமே உயர்த்தியது.

இந்தியப் பங்குச்சந்தை நிஃப்டி குறியீடு 52 வாரங்களில் உயர்ந்த மதிப்பாக 18604.45ஐ அடைந்தது, 27 ஜனவரியில் 16898.80ஆகக் குறைந்துள்ளது. ஆன போதும் 10 விழுக்காடு முதல் திருத்தம் பெற பங்குச்சந்தை 16,744.005க்கு குறையவேண்டும். 52 வாரங்களில் குறைந்த மதிப்பு 14151.40.

இந்தியாவில் 2020 டிசம்பரில் 38.7 மில்லியனாக இருந்த மொத்த வேலையற்றோர் எண்ணிக்கை 2021 டிசம்பரில் 34 விழுக்காடு உயர்ந்து 52 மில்லியனாக அதிகரித்துள்ளது,

இந்தியாவில் நகர்ப்புறங்களில் வேலையின்மை நவம்பரில் 8.21 விழுக்காடாக இருந்தது, டிசம்பர் மாதத்தில் 9.3 விழுக்காடாக அதிகரித்துள்ளது. கிராமப்புற வேலையின்மை கடந்த நவம்பரில் 6.44 சதவீதமாக இருந்த நிலையில், டிசம்பரில் 7.28 சதவீதமாக அதிகரித்துள்ளது. காலமுறை உழைப்புச் சக்தி கணக்கெடுப்பு 2019-20இன் படி, கிட்டத்தட்ட 3.2 கோடி மக்கள் விவசாயத் தொழிலுக்கு இடம்பெயர்ந்துள்ளனர், அதாவது விவசாயத்தில் தொழிலாளர்களின் பங்கு 3% உயர்ந்துள்ளது.

மும்பையைத் தளமாகக் கொண்ட “பிரைஸ்” என்ற குழு நடத்திய ஆய்வின் மூலம், 2015-16இலிருந்து 2020-21-வரை 5 ஆண்டுகளில் இந்தியாவின் மிக ஏழ்மையான 20 விழுக்காடு குடும்பங்களின் வருமானம் 53% சரிந்துள்ளதாகவும், கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கத்தினரின் குடும்ப வருமானம் இதே காலகட்டத்தில் 39 விழுக்காடு சரிந்துள்ளதாகவும், நடுத்தர வர்க்க மக்களின் (middle class) ஆண்டு வருமானம் 9 விழுக்காடு குறைந்துள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இதே ஐந்தாண்டு காலக்கட்டத்தில் உயர் நடுத்தர வர்க்கக் குடும்பங்களின் வருமானம் 7 விழுக்காடும், 20% பணக்காரர்களின் ஆண்டுக் குடும்ப வருமானம் 39 விழுக்காடும் வளர்ச்சி பெற்றுள்ளது எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டில் 20 விழுக்காடு பணக்காரர்கள் மொத்தக் குடும்ப வருமானத்தில் 50.2 விழுக்காடு பெற்றிருந்தனர். அது 2021ஆம் ஆண்டில் 56.3 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதற்கு நேர்மாறாக, மொத்தக் குடும்ப வருமானத்தில் 20 விழுக்காடு ஏழை மக்களின் பங்கு 5.9 விழுக்காட்டிலிருந்து 3.3 விழுக்காடாகக் குறைந்துள்ளது. குறிப்பாக, 2021இல், கொரோனா தாக்குதலுக்குப் பிறகு இந்த 20 விழுக்காடு ஏழை மக்கள் 2016இல் பெற்ற வருமானத்தில் பாதி

அளவு மட்டுமே இப்போது பெற முடிவதாகவும் இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. 2016ஆம் ஆண்டில் மிகவும் ஏழையான 20 விழுக்காட்டினரில், 90 விழுக்காட்டினர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். 2021ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 70 விழுக்காடாகக் குறைந்துள்ளது. அதேநேரம் நகர்ப்புறங்களில் வசித்து வரும் மிகவும் வறிய ஏழை மக்களின் பங்கு 2016ல் 10 விழுக்காடாக இருந்தது 2021இல் 30 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்கள் நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டே வருகின்றன. இந்தியா விடுதலை அடைந்த 75ஆம் ஆண்டுக்கான இலக்காக புதிய பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கலாம், புதிய வேலைவாய்ப்புத் திட்டங்களை அறிவிக்கலாம். ஆனால் சமூக விடுதலையின் பொருளையே கேலிக்குள்ளாக்கும் விதத்தில் விடுதலை அடைந்ததன் 75ஆம் ஆண்டை முன்னிட்டு 75 வாரங்களில் 75 'யூனிகார்ன்' நிறுவனங்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்க வேண்டும் என்று இந்தியத் தொழில்துறைக்கு மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் அழைப்பு விடுத்துள்ளார்.

பொதுத்துறை நிறுவனங்கள் வழங்கும் ஈவுத்தொகையின் பங்கு 2009-10இல் அவர்களின் நிகர இலாபத்தில் 36%இலிருந்து 2020-21இல் 77% ஆக அதிகரித்துள்ளது. இதில் பெரும்பகுதி அவற்றின் முக்கியப் பங்குதாரரான மத்திய அரசைச் சேரும். பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் திட்டங்களுக்கான நிதியை வெளிநாட்டுக்கடனின் மூலம் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இரயில்வேத் துறையில் அதிகரித்து வரும் தனியார்மயம் காரணமாக இரயில் நிலைய மேம்பாட்டுக் கட்டணமாக பயணிகளின் பயணச் சீட்டுக் கட்டணத்தில் ரூ.10 முதல் ரூ.50 வரை வசூலிக்க இரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளது. இதனால் தொலைதூர இரயில் பயணங்களுக்கான கட்டணம் உயரும்.

பாஜக அரசு ஏர் இந்தியா விமான நிறுவனத்தை டாடா குழுமத்திற்குக் கிட்டத்தட்ட இலவசமாக ஒப்படைத்ததுடன் ஏர் இந்தியாவின் ரூ. 61,000 கோடி மதிப்புக் கடனையும் அடைத்துள்ளது. பி.எஸ்.என்.எல் நிறுவனத்தை வளர விடாமல் கழுத்தறுத்து ஜியோவை வளர்த்தெடுத்த பாஜக இப்பொழுது வோடபோனைக் காக்கப் பங்குதாரராக மாறியுள்ளது.

தொலைத்தொடர்பு ஒழுங்காற்று ஆணைய நிறுவனத்திற்கு வோடபோன்-ஐடியா செலுத்த வேண்டிய கிட்டத்தட்ட ரூ. 2 இலட்சம் கோடி கடன்களில் வட்டித் தொகையான ₹16,000 கோடியை அரசுப் பங்குகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் மத்திய அரசு வோடபோன் ஐடியாவின் 35.8% பங்குகளை வைத்திருக்கும், அதே நேரத்தில் வோடபோன்

குழுமத்தின் பங்கு 44.39% இலிருந்து 28.5% ஆகவும், ஆதித்யா பிர்லா குழுமத்தின் உரிமை 27.66% இலிருந்து 17.8% ஆகவும் குறையும். ஜியோ நிறுவனம் நிரந்தர இணைப்பு மூலமான பிராட்பேண்ட் சேவை அளிப்பதில் பிஎஸ்என்எல் நிறுவனத்தைப் பின்னுக்குத் தள்ளி முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. தற்போது கூகுள் ஏர்டெல் நிறுவனத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த நீண்டகால ஒப்பந்தமாக ரூ. 7,500 கோடியை (1 பில்லியன் டாலர்) முதலீடு செய்துள்ளது.

பிரதான் மந்திரி மானியத்துடன் கூடிய வீட்டுக்கடன் திட்டத்தின் கீழ் வீட்டுக்கடன் வழங்குவது, சுகன்யா சம்ரித்தி யோஜனாவின் கீழ் வைப்புத்தொகைத் திட்டம் அளித்தல் போன்ற பல செயல்பாடுகளை கூட்டுறவு வங்கிகள் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்று கூட்டுறவு சங்கங்களின் அமைப்பான சககர் பாரதி, கூறியுள்ளது. மத்திய அரசின் திட்டங்களில் பங்குபெற அனுமதிப்பதிலிருந்து வரிவிதிப்பில், வணிக வங்கிகளுக்கு இணையாகக் கூட்டுறவு வங்கிகள் சமநிலை பெறுவதை உறுதிசெய்ய வேண்டும் என அரசுக்கு, நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கோரிக்கைகளை அளித்துள்ளது.

நிட்டி ஆயோக் முன்னுரிமைத் துறைக் கடனில் மின்சார வாகனங்களுக்கான கடனையும் சேர்க்குமாறு முன்மொழிந்துள்ளது. இது பிற முன்னுரிமைத் துறைகளுக்கான கடன் அளவைக் குறைக்காமல் இருக்க வேண்டியது அவசியம். சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் துறையில் அதிக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க நிதின் கட்கரி அழைப்பு விடுத்துள்ளார். உள்நாட்டில் முன்னுரிமைத் துறைக் கடன் மூலம் மலிவுக் கடனைப் பெறச் செய்யாமல் வெளிநாட்டு நிதியைச் சார்ந்து இயங்கச் சொல்வது சரியான வழிமுறையாகாது.

மத்திய வங்கியின் தரவுகளின் படி கடந்த 5 ஆண்டுகளில் மீட்கப்பட்ட தொகையைப் போல் இரு மடங்குத் தொகையை வங்கிகள் தள்ளுபடி செய்துள்ளன. இந்தியாவில் உள்ள வணிக வங்கிகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 9.54 இலட்சம் கோடிக் கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் வங்கிகள் தள்ளுபடி செய்த தொகை, அந்தக் காலகட்டத்தில் வசூலிக்கப்பட்ட தொகையைப் போல் இரு மடங்கு அதிகம். பொதுத்துறை வங்கிகள் 5 ஆண்டுகளில் 7 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிற்குத் தள்ளுபடி செய்துள்ளன, இது 2014 முதல் அரசு அளித்த மூலதனத்தைப் போல் இரு மடங்கு அதிகமாகும்.

மத்திய வங்கியின் அறிக்கை, 2011ஆம் நிதியாண்டிலிருந்து வழங்கப்படும் மொத்தக்கடனில் பொதுத்துறை வங்கிகளின் பங்கு குறைந்து வருவதையும், அதே சமயம் தனியார் வங்கிகளின் பங்கு உயர்ந்து வருவதையும் குறிப்பிட்டுள்ளது. மொத்தக் கடன்களில் பொதுத்துறை

வங்கிகளின் பங்கு 2016இல் தோராயமாக 70.84% ஆக இருந்து 2021இல் 58.68% ஆகக் குறைந்துள்ளது, அதே நேரத்தில் தனியார் வங்கிகளின் பங்கு 2016இல் 24.56%இலிருந்து 2021இல் 36.41% ஆக உயர்ந்துள்ளது.

ரகுராம் ராஜன் இந்தியா வெறும் உற்பத்தி அல்லது விவசாயம் சார்ந்து சிந்திப்பதை நிறுத்தி அதற்கு பதிலாக, அதன் பெரிய பலமான சேவைத் துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இது சரியான பரிந்துரையல்ல, உற்பத்தி, விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதே நாட்டின் தற்சார்புப் பொருளாதாரத்திற்கும், நீடித்த வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

நிதிநிலை அறிக்கைக்கான நிதி ஆதாரங்களை விரிவுபடுத்துவதற்கான ஒரு வழி, அரசு நிறுவனங்களின் சில பகுதிகள், உபரி அரசு நிலங்கள் உள்ளிட்ட சொத்துகளை விற்பனை செய்ய வேண்டும் என்றும் ராஜன் பரிந்துரைத்துள்ளார். பொதுத்துறைச் சொத்துக்களை விற்பதே பாஜக அரசின் தேர்வுகளில் முதலாவதாக இருக்கும் போது இத்தகைய பரிந்துரை செய்வதற்கே அவசியம் இல்லை. இத்தகைய போக்கே தொடர்ந்தால் சில ஆண்டுகளில் விற்பதற்கு எதுவும் எஞ்சப் போவதும் இல்லை.

இலக்கு வரம்பிற்குள் நிதிப் பற்றாக்குறையை நிலைநிறுத்தும் முயற்சியில், திருத்தப்பட்ட மதிப்பீடுகளுடன் தங்கள் செலவினங்களைக் கட்டுப்படுத்துமாறு அமைச்சகங்களையும் துறைகளையும் நிதி அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. நிதியாண்டின் கடைசிக் காலாண்டில் செலவினம் நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில் 33% ஆகவும், மார்ச் மாதச் செலவு, நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில் 15%ஐ விட அதிகமாகவும் இருக்கக் கூடாது எனவும் வரம்பிடப்பட்டுள்ளது.

2021-22 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில் 30 விழுக்காடு கூடுதலாக 5.54 இலட்சம் கோடி முதலீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. 2021-22 நிதியாண்டின் ஏப்ரல் -நவம்பர் காலப் பகுதியில் மத்திய அரசின் மூலதனச் செலவு அதற்கு முந்தைய நிதியாண்டில் செய்யப்பட்டதைக் காட்டிலும் 14% மட்டுமே அதிகரித்துள்ளது; அதாவது மூலதனச் செலவுகளில் 54 விழுக்காடு சரிவு ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு பெரும்பாலான துறைகளை ஜூலை-செப்டம்பர் காலாண்டில் 25%க்குப் பதிலாக 20 விழுக்காட்டளவில் செலவைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தியது. நிதியாண்டின் ஏப்ரல்-நவம்பர் காலப்பகுதியில், மத்திய அரசின் மொத்தச் செலவு ரூ. 20.7 லட்சம் கோடி அல்லது முழு ஆண்டு மதிப்பீட்டில் 59.6% ஆக இருந்தது, முந்தைய ஆண்டில் ஏப்ரல்-நவம்பர் காலப்பகுதியில் மொத்தச்

செலவு இலக்கில் 62.7% ஆக இருந்துள்ளது.

2020-21ஆம் ஆண்டிற்கு சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடு திருத்தப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து 10 விழுக்காடு சரிவடைந்துள்ளது, கல்விக்கான ஒதுக்கீட்டில் ஆறு விழுக்காடு குறைக்கப்பட்டது; மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு 1.5 விழுக்காட்டிலிருந்து 0.6 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

பொதுக் கணக்குக் கட்டுப்பாட்டாளரின் தரவுகளின் படி, மத்திய அரசின் மொத்தச் செலவினம், நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில் 59.6% ஆகவே இருப்பதும், மூலதனச் செலவினங்கள், நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில் 50%க்கும் குறைவாகவே செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளிலிருந்து நிதி பெறுவதற்கான வெளிநாட்டு நிதிப்பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்ட அங்கீகாரத்தைப் புதுப்பிக்க மத்திய அரசு மறுத்து விட்டதால் 16 மாநிலங்களில் நடைபெற்றுவரும் மனிதநேயம் தொடர்பான பணிகள், உதவிகள் தடைப்பட்டுள்ளன என்று ஆக்ஸ்ஃபாம் இந்தியா தெரிவித்துள்ளது. ஆக்ஸ்ஃபாம் இந்தியா, டெல்லி ஜாமியா மிலியா பல்கலைக்கழகம், டெல்லி ஐஐடி, இந்திய மருத்துவக் கூட்டமைப்பு உள்ளிட்ட 6 ஆயிரம் நிறுவனங்கள் வெளிநாடு நிதிப்பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்ட உரிமத்தைப் புதுப்பிக்கத் தவறியதாகக் கூறி அவற்றின் உரிமத்தை மத்திய உள்துறை அமைச்சகம் நிறுத்தி வைத்தது. இதனால், இந்த நிறுவனங்களால் வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெற முடியவில்லை. பாஜக அரசின் இத்தகைய நிதி ஒடுக்குமுறைச் செயல்பாடு கடும் கண்டனத்திற்குரியது..

ஆக்ஸ்ஃபாம் அறிக்கையின் படி கோவிட் கொள்ளை நோய்க்குப் பிறகு இந்தியப் பெரும் செல்வந்தர்களது சொத்துக்களின் மதிப்பு இருமடங்காக அதிகரித்துள்ளது. பெரும் செல்வந்தர்களது எண்ணிக்கை 102லிருந்து 39 விழுக்காடு அதிகரித்து 142 ஆக உயர்ந்துள்ளது,

முதல் 10 விழுக்காடு பெரும் செல்வந்தர்கள் தேசிய செல்வத்தில் 45 விழுக்காட்டைக் குவித்துள்ளனர், அதே நேரத்தில் மக்கள்தொகையில் அடிமட்ட 50 விழுக்காட்டினரின் பங்கு வெறும் 6 விழுக்காடு மட்டுமே. சொத்து வரியை மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலம் பெரும்பான்மையினருக்கு வளங்களை உருவாக்குவதற்காக இந்தியாவின் பெரும் செல்வந்தர்களிடமிருந்து செல்வத்தை மறுபங்கீடு செய்யுமாறு நாங்கள் அரசைக் கேட்டுக் கொள்கிறோம், 10 கோடிக்கு மேல் வருமானம் உள்ள தனிநபர்கள் மீது வெறும் 2 விழுக்காடு வரி விதித்தால், அமைச்சகத்தின் நிதிவருவாய் 121 விழுக்காடு அதிகரிக்கும் என்று

தெரிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் 102 பெரும் செல்வந்தர்கள் உலக அளவில் மக்களை வறுமையிலிருந்து மீட்க எங்களுக்கு அதிக வரி விதியுங்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இதில் இந்தியாவின் அம்பானியோ, அதானியோ இடம்பெறவில்லை என்பதை சொல்லவும் வேண்டுமா?

அந்த 102 பெரும் செல்வந்தர்கள் தங்கள் கோரிக்கையில் "தற்போதைய வரிமுறை சரியாக இல்லை. கடந்த இரண்டு வருடங்களாக இந்த உலகம் தீராத துன்பத்தில் இருந்து வருகிறது. இந்தத் தொற்றுக் காலங்களில் உண்மையில் எங்களது செல்வம் உயர்வதைக் கண்டோம். பணக்காரரர்களிடம் செல்வம் இரு மடங்காக அதிகரித்துள்ளது. அதேசமயம் வறுமையும், பொருளாதார ஏற்றத்தாழ்வும் உலக அளவில் அதிகரித்துள்ளன. இதற்கு தற்போதைய வரிவிதிப்பு முறை நியாயமாக இல்லாததே காரணம் என்று நாங்கள் கருதுகிறோம். செல்வந்தர்களிடம் பணம் மேலும் உயர்கின்றது. எனவே எங்களைப் போன்ற பெரும் செல்வந்தர்கள் மீது அதிக வரி விதிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ஒவ்வொரு நாடும், பெரும்செல்வந்தர்களின் மீது அதிக வரி விதிப்பதன் வாயிலாக ஓராண்டில் 189 லட்சம் கோடி ரூபாய் கிடைக்கும். இத்தொகை உலக மக்கள் அனைவருக்கும் கரோனா தடுப்பூசி செலுத்தவும், 230 கோடி பேரை வறுமையில் இருந்து மீட்கவும் உதவும்" எனத் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர்களின் கோரிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதா, இல்லையா என்பது குறித்து ஏதும் அறிய முடியாமல் அச்செய்தி காற்றோடு கலந்து விட்டது.

இந்தியாவின் பெரும் செல்வந்தர்கள் என்ன செய்கிறார்கள்? அதானி ஸ்டேட் வங்கியின் உறுதுணையோடு வங்கி வாடிக்கையாளர்களைக் கொள்ளையடிக்கும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். முகேஷ் அம்பானி சமீபத்தில் நியூயார்க் நகரில் சொகுசு ஹோட்டல் வாங்கியுள்ளார்..

<u>பணவீக்கம்:</u>

சென்ற ஆண்டு டிசம்பரில் 1.95 விழுக்காடாக இருந்த மொத்தவிலைப் பணவீக்கம் இந்த ஆண்டு டிசம்பரில் 13.56 விழுக்காடாக உயர்ந்துள்ளது, எரிபொருள், ஆற்றலின் விலைவாசி 32.30 விழுக்காடு உயர்ந்துள்ளது உற்பத்திப் பொருட்களின் விலைவாசி 10.62 விழுக்காடு உயர்ந்துள்ளது. கனிம எண்ணெய்கள், அடிப்படை உலோகங்கள், உணவுப் பொருட்கள், கச்சா

பெட்ரோலியம், ஆகியவற்றின் விலை உயர்வினால் பணவீக்கம் இந்தளவுக்கு உயர்ந்துள்ளது. நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறைப் பணவீக்கத்தின் அளவு டிசம்பர் மாதத்தில் 5.59 விழுக்காடு அதிகரித்துள்ளது, சென்ற மாதத்துடன் ஒப்பிடும் போது 0.36 விழுக்காடு குறைந்துள்ளது. உணவுப் பொருட்களின் விலைவாசி 4.05 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற மாதத்துடன் ஒப்பிடும் போது 1.18 விழுக்காடு குறைந்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 2.99 விழுக்காடு குறைந்துள்ளது. பழங்களின் விலைவாசி 3.54 விழுக்காடு உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 2.43 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை 1.48 விழுக்காடு உயர்ந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 24.32 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன், இறைச்சியின் விலைவாசி 4.58 விழுக்காடு உயர்ந்துள்ளது. .

நவம்பர் மாதத்தில் தொழில்துறை வளர்ச்சி:

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி நவம்பர் மாதத்தில் உற்பத்தி 1.4 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறை, செய்பொருளாக்கத் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றில் உற்பத்தி முறையே 5.0, 0.9, 2.1 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மைப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி அளவுகள் முறையே 3.5, 2.5, 3.8 விழுக்காடு உயர்ந்துள்ளன. மூலதனப் பொருட்களின் உற்பத்தி 3.7 விழுக்காடு குறைந்துள்ளது. உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 0.8 விழுக்காடு உயர்ந்துள்ளது. நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 5.6 விழுக்காடு குறைந்துள்ளது.

டிசம்பரில் தொழில்துறை வளர்ச்சி:

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கிய தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக்குறியீடு டிசம்பரில் 3.8 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு டிசம்பர் மாத உற்பத்தி அளவோடு ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 5.2 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 12.9 விழுக்காடும் அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 1.8 விழுக்காடும் எஃகு உற்பத்தி 1 விழுக்காடும் குறைந்துள்ளது. பெட்ரோலிய சுத்திகரிப்புப் பொருட்களின் உற்பத்தி 5.9 விழுக்காடு அதிகரித்துள்ளது. உர உற்பத்தி 3.5 விழுக்காடு அதிகரித்துள்ளது. இயற்கை எரிவாயு உற்பத்தி 19.5 விழுக்காடும், மின்சார உற்பத்தி 2.5 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

2021-22ஆம் ஆண்டிற்கான தேசிய வருமானத்தின் முதல் முன்மதிப்பீடுகள்:

தேசியப் புள்ளியல் அலுவலகம் 2021-22 ஆம் ஆண்டிற்கான தேசிய வருமானத்தின் முதல் முன்மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது. 2021-22ஆம் ஆண்டில் நிலையான விலையில் (2011-12) உண்மையான உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு ₹147.54 லட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2020-21இல் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பில் 7.3 விழுக்காடு குறுக்கம் காணப்பட்டது. அதனுடன் ஒப்பிடும் போது 2021-22ஆம் ஆண்டில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 9.2 விழுக்காடாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பிப்ரவரியில் நிதி அமைச்சகத்தின் பொருளாதார ஆய்வறிக்கை 2021-22 நிதியாண்டிற்கு 11 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தைக் கணித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

அடிப்படை விலைகளில் உண்மையான ஜிவிஏ (மொத்த மதிப்புக் கூட்டல்) 2020-21இல் ரூ.124.53 இலட்சம் கோடியாக இருந்தது 8.6 விழுக்காடு வளர்ச்சியடைந்து 2021-22இல் ரூ.135.22 இலட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தனியார் இறுதி நுகர்வுச் செலவினம் 2020-21இல் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பில் 56.0 விழுக்காடாக இருந்தது 2.1 விழுக்காடு குறைந்து 2021-22இல் 54.8 விழுக்காடாக உள்ளது. அரசு இறுதி நுகர்வுச் செலவினம் 2020-21இல் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பில் 11.7 விழுக்காடாக இருந்தது 0.8 விழுக்காடு குறைந்து 2021-22இல் 11.6 விழுக்காடாக உள்ளது. மொத்த நிலைமூலதன உருவாக்கத்தின் மதிப்பு 2020-21இல் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பில் 31.2 விழுக்காடாக இருந்தது 5.4 விழுக்காடு மட்டுமே உயர்ந்து 2021-22இல் 32.9 விழுக்காடாக உள்ளது. .

2020-21இல் 7.2 விழுக்காடு குறுக்கமடைந்த உற்பத்தித் துறை 2021-22இல் 12.5 விழுக்காடு வளர்ச்சி பெற்றுள்ளது. சுரங்கம் மற்றும் குவாரி 14.3 விழுக்காடு வளர்ச்சி பெற்றுள்ளது. வர்த்தகம், ஹோட்டல்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு தொடர்பான சேவைகள் 11.9 விழுக்காடு வளர்ச்சி பெற்றுள்ளன. வேளாண் துறை 3.9 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ளது. மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல் & பிற பயன்பாட்டு சேவை 8.5 விழுக்காடு வளர்ச்சி பெற்றுள்ளது. நிதி, ரியல் எஸ்டேட் & தொழில்முறைச் சேவைகளின் வளர்ச்சி 4 விழுக்காடு உயர்ந்துள்ளது. பொது நிர்வாகம், பாதுகாப்பு & பிறசேவைகளின் வளர்ச்சி 10.7 விழுக்காடு உயர்ந்துள்ளது.

2021-22ஆம் ஆண்டில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019-20ஆம் ஆண்டில் கோவிட்

நோய்க்கு முந்தைய ரூ.145.69 லட்சம் கோடியைத் தாண்டிவிடும் என தேசியப் புள்ளியல் அலுவலகம் மதிப்பிட்டிருந்தது. தற்போதுதான் கோவிட்-19 தொற்றுத் தாக்கத்துக்கு முந்தைய நிலையை அடைந்துள்ளதே தவிர, வளர்ச்சி ஏற்படவில்லை என்பதே உண்மை. 2020-21 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021-22இல் தனியார் இறுதி நுகர்வுச் செலவினம், அரசு இறுதி நுகர்வுச் செலவினம் குறைந்துள்ள நிலையும் மொத்த நிலைமூலதன உருவாக்கம் கணிசமாக அதிகரிக்காமல் இருப்பதும் கவலைக்குரிய செய்திகளாகும்.

பட்டினி, ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராட சமூக உணவகங்களுக்கான திட்டத்தை உருவாக்க மத்திய, மாநிலங்கள், ஒன்றியப் புலங்களுக்கு வழிகாட்டுதல்களைக் கோரும் பொதுநல வழக்கில் விசாரணை மேற்கொண்ட உச்ச நீதிமன்றம் சமூக உணவகங்களுக்கான திட்டத்தை உருவாக்குமாறு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. நாடு முழுவதும் சமூக உணவகங்கள் திட்டத்தை செயல்படுத்துவதற்கும், மாநிலங்களுக்குக் கூடுதல் உணவு தானியங்கள் வழங்குவதற்கும் ஒரு மாதிரியைத் தயார் செய்யுமாறு உச்ச நீதிமன்றம் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளது.

விரைவில் விற்பனையாகும் நுகர்வுப் பொருட்களுக்கான (FMCG) வேண்டலை அதிகமாக்க உள்கட்டமைப்புத் திட்டங்கள் அல்லது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (MNREGA) மூலம் நுகர்வோரின் பணப் புழக்கத்தை அதிகமாக்கும் விதமாக மத்திய அரசு பணம் வழங்க வேண்டும் எனப் பொருளியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் சுப்பராவ், உழைப்பு செறிந்த துறையிலிருந்து, மூலதனம் செறிந்த துறைக்கு செயல்பாடுகள் மாறியதால் வேலைகள் இழக்கப்பட்டுள்ளன என்றும், உயர் வருமானப் பிரிவினர் தங்கள் வருமானத்தைப் பாதுகாத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், உண்மையில் அவர்களின் சேமிப்பையும் செல்வத்தையும் வளர்க்க முடிந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். வரவிருக்கும் நிதிநிலை அறிக்கை, வளர்ச்சியை விரைவுபடுத்துவதைத் தவிர, பொருளாதாரத்தில் அதிகரித்துள்ள சமத்துவமின்மையைக் குறைப்பதற்கும், வேலைகளை உருவாக்குவதற்கும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

ஃபிப்ரவரி 1இல் நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய உள்ளார். 5 மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களையும் கருத்தில் கொண்டுதான் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். .

<u>மக்கள்நலன் அடிப்படையில் நிதிநிலை அறிக்கையின் மீதான எதிர்பார்ப்புகள் பின்வருமாறு:</u>

கல்வி, சுகாதாரத் துறைகளுக்கான ஒதுக்கீடுகளைக் கணிசமாக உயர்த்த வேண்டும்.

பொதுச் சொத்துகளை விற்று வருவாய் திரட்டும் ஈனப் பிழைப்பை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

உச்ச நீதிமன்றக் கோரிக்கையின் படி நாடு முழுவதும் பட்டினி, ஊட்டச்சத்துக் குறைபாட்டை குறைக்க சமூக உணவகங்கள் உருவாக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், அதில் பன்முகப்பட்ட வேலைவாய்ப்புகளை வழங்கும் விதத்தில் புத்தாக்க முயற்சிகளை அறிமுகப்படுத்த வேண்டும். நகர்ப்புறங்களிலும் பரந்த அளவில் இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்..

இந்தியாவில் அதிகரித்துள்ள வருவாய், சொத்துகளின் பொருளாதாரச் சமமின்மையை குறைப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு அரசு வருவாயில் சுற்றடி வரிகளின் பங்கீட்டைக் குறைத்து நேர்முக வரிகளின் பங்கீட்டை அதிகரிக்கும் விதத்தில் வரியமைப்பில் சீர்திருத்தம் ஏற்படுத்த வேண்டும்.

சொத்துவரியை அறிமுகப்படுத்த வேண்டும். பெருநிறுவனங்கள் மீதான வரியை உயர்த்த வேண்டும். ரியல் எஸ்டேட் மீதான வரியை உயர்த்த வேண்டும்.

பங்குச் சந்தைகளில் ஊகமுதலீடுகளைக் குறைக்கும் விதமாக நிதிப் பரிவர்த்தனை வரியை உயர்த்த வேண்டும்..

பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்கும் விதத்தில் அவற்றையும் சரக்கு, சேவை வரியமைப்புக்குள் சேர்க்க வேண்டும்.

சொத்துகள் (மூலதனம்) மற்றும் மூலதன அடிப்படையிலான வருமானத்தின் மீதான வரிகளை உயர்த்த வேண்டும்.

சிறு, குறு நடுத்தர நிறுவனங்கள் மலிவுக் கடன் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

தற்போது குறைந்தபட்ச ஆதார விலையினால் 5.6 விழுக்காடு விவசாயிகள் மட்டுமே பயனடைகின்றனர். அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

சமூகநீதியின் அடிப்படையில் இந்த எதிர்பார்ப்புகள் முற்றிலும் ஏற்புடையவைதான். ஆனால் இவற்றை பாஜக-விடம் எதிர்பார்க்கலாமா?

## பொருளாதார ஆய்வறிக்கை 2021-22 (Economic Survey):




ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு முந்தைய நாள் நாடாளுமன்றத்தில் பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்படுகிறது. பொருளாதார ஆய்வறிக்கை இந்தியாவின் பொருளாதார நிலவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, பிரச்சினைகளைக் கண்டறிந்து அடுத்த நிதியாண்டில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் பெற எத்தகைய கொள்கை நெறிமுறைகளை செயல்படுத்த வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலையும் அளிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பொருளாதார ஆய்வறிக்கை தயாரிக்கப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அறிவியலுக்கு முற்றிலும் புறம்பான முறையில் மத்தியில் ஆளும் கட்சியின் கொள்கைகள், செயல்பாடுகள்தான் மிகச் சரியானவை என நியாயம் கற்பிப்பதுடன் அவற்றைப் போற்றிப் புகழ்பாடும் பிராச்சார அறிக்கையாகவும் பொருளாதார ஆய்வறிக்கை மாற்றப்படுகிறது. பாரபட்சமற்ற முறையில் பொருளாதாரத் தரவுகளை ஆய்வு செய்யாமல் ஆளும் கட்சிக்கு சாதகமான முறையில் புள்ளிவிவரங்கள் திரித்துச் சித்திரிக்கப்படுகின்றன.

சமீப ஆண்டுகளாக இரு தொகுப்புகளாக வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கை இந்தாண்டு ஒரு தொகுப்பாகக் குறைக்கப்பட்டுள்ளது. புள்ளிவிவர அட்டவணைகள் தனித்தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு தொகுப்புகள் ஒரு தொகுப்பாகக் குறைக்கப்பட்டதால்தானோ என்னவோ, சென்ற ஆண்டில் பா.ஜ.கவின் சாதனைகளாகப் போற்றி அளந்துகொட்டிய புகழ்ப் பாடல்கள் இந்த ஆண்டு சற்று அடக்கி வாசிக்கப்பட்டிருப்பது போன்ற தோற்றம் ஏற்படுகிறது.

தீவிர நிச்சயமற்ற நிலைமைகளின் கீழ் கொள்கை உருவாக்குதலின் கலையும், அறிவியலுமே இந்த ஆண்டு பொருளாதார ஆய்வறிக்கையின் கருப்பொருள்,

"இந்த நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டு, பாஜக அரசு 'பார்பெல் உத்தியை' (Barbell Strategy) தேர்வு செய்தது. மற்ற நாடுகள் 'வாட்டர்ஃபால்' (Waterfall Strategy) உத்தியைக் கடைப்பிடிக்கும் போது இந்தியா பின்னூட்ட-சுழல்கள் மற்றும் நிகழ்நேரச் சரிசெய்தல் ஆகியவற்றைக் கொண்ட 'அஜைல்' உத்தியைக் (Agile Strategy) கடைபிடித்ததாகவும் பீற்றிக் கொள்கிறது.

கோவிட் கொள்ளை நோய் பரவிய போது சமூகத்தின் பாதிக்கப்படக் கூடிய பிரிவினர் மீதும், வணிகத்தொழில் துறையினர் மீதும் அதன் தாக்கத்தைக் குறைக்க இந்திய அரசு உடனடியாகச் செயல்பட்டுப் பாதுகாப்பு வலைகளின் பூங்கொத்தை அளித்ததாம். ஜன்தன் கணக்கு வைத்துள்ள பெண்களுக்கு 500 ரூபாய் மூன்று முறை அளித்ததாம். இதை நிதித்தூண்டல் என்று ஒருமுறை சொல்லுவதே வெட்கக்கேடு இதை சென்ற ஆண்டு சொல்லிக் காட்டியதுடன் விடாமல் இந்த ஆண்டு மீண்டும் அதே பல்லவியைப் பாடி, சொல்லிக் காட்டுவதை என்னவென்பது? கோவிட் தொற்று காலத்திற்கு முன்னரே நடைமுறையில் இருந்த திட்டங்களையும், சில கடன் உத்தரவாதத் திட்டங்களையும் நிதித் தொகுப்பு என்ற பெயரில் புதிய திட்டங்கள் போல் மத்திய அரசு அறிவித்துச் செயல்படுத்தியதே ஒழிய புதிய நிதித் தொகுப்பு எதுவும் அளிக்கவில்லை என்பதே உண்மை.

இதுகுறித்து ஆய்வு மேற்கொண்ட நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரை: அரசு அளித்த நிதித்தொகுப்புகள் மிகவும் போதாக்குறையானவை, ஆகவே மக்களையும், பொருளாதாரத்தையும் காக்க மீண்டும் நிதித்தொகுப்புகள் அளிக்க வேண்டும் என்பதாக இருந்தது. ஆனால் மத்திய அரசு அதையெல்லாம் பொருட்படுத்தவேயில்லை.

மார்ச் 2020இல் முன்னறிவிப்பு இல்லாமல் கடுமையான பொதுமுடக்கத்தை நடைமுறைபடுத்தியதால் உயிர்களும், வாழ்வாதாரங்களும் காக்கப்பட்டதாகப் பாராட்டுகிறது ஆய்வறிக்கை. அதனால் எண்ணற்ற புலம்பெயர் தொழிலாளர்கள் வதையுற்றுக் கொல்லப்பட்டனர் என்பது குறித்து எந்தக் குறிப்பும் இல்லை.

உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான மூலதனச் செலவுகள் பெரிதும் உயர்த்தப்பட்டு, இடைக்கால வேண்டல் உருவாக்கப்பட்டதுடன் வழங்கல் பக்க நடவடிக்கைகளும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு, நீடித்த நீண்டகாலப் பொருளாதார விரிவாக்கத்திற்குத் தளம் அமைத்ததாகவும் பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

.மற்ற நாடுகள் வேண்டல் பக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்த போது இந்தியா

சாதுர்யமாக வழங்கல் பக்கச் சீர்திருத்தங்களை மேற்கொண்டதாகவும் ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. அரசு ஒழுங்குமுறைகளின் நீக்கம், தனியார்மயம், செயல்முறைகளை எளிமைப்படுத்துதல், 'பின்னோக்கிய வரி' நீக்கம், உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை போன்ற பல்வேறு வழங்கல் பக்க சீர்திருத்தங்களை மேற்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளது. இச்சீர்திருத்தங்களால் வழங்கல் பக்க பிரச்சினைகள் சரிசெய்யப்பட்டிருந்தால் பிறகு ஏன் மொத்தவிலைப் பணவீக்கம் தொடர்ச்சியாகப் பல மாதங்களில் இரண்டு இலக்க அளவில் கடுமையாக உயர்ந்துள்ளது? உலோகங்கள், மூலப்பொருள், ஆற்றல் ஆகியவற்றின் விலைவாசி கடுமையாக உயர்ந்திருந்ததை வழங்கல் பக்க சீர்திருத்தங்களால் ஏன் சரிசெய்ய முடியவில்லை? அடிப்படை விளைவுகள் காரணமாக, அதாவது சென்ற ஆண்டு மொத்தவிலைப் பணவீக்கம் குறைந்திருந்ததால் இந்த ஆண்டில் அதிகரித்துள்ளது, அது சரியாகி விடும் என்றும், இறக்குமதி செய்யப்படும் பணவீக்கம் குறித்து இந்தியா எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் ஆய்வறிக்கை கூறுகிறது.

பெருந்தொற்றுநோயால் சுகாதாரத் துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதால் 2019-20ல் சுகாதாரத் துறைக்கான செலவு 2.73 இலட்சம் கோடி ரூபாயில் இருந்து 4.72 இலட்சம் கோடியாகக் கிட்டத்தட்ட 73 விழுக்காடு உயர்த்தப்பட்டதாகக் குறிப்பிடுகிறது பொருளாதார ஆய்வறிக்கை. 2,87,000 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் ஜல்ஜீவன் திட்டத்திற்கான ஒதுக்கீடும் சுகாதாரத் துறையில் சேர்க்கப்பட்டதன் மூலமே 4.72 இலட்சம் கோடியாக மிகையளவில் ஊதிப் பெருக்கிக் காட்டப்பட்டது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

நிதித்துறை, ரியல் எஸ்டேட், பொது நிர்வாகப் பிரிவுகள் தற்போது கோவிட்-19 பெருந்தொற்றுக்கு முந்தைய நிலைகளை விட அதிக வளர்ச்சி பெற்றுள்ளதாகவும், சுற்றுலா, ஓட்டல் போன்ற துறைகளைத் தவிர பெரும்பாலான துறைகள் கோவிட் தாக்கத்திற்கு முந்தைய நிலையைக் காட்டிலும் வளர்ச்சி கண்டுள்ளதாகவும் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021-22 நிதிநிலை அறிக்கையில் முந்தைய ஆண்டை விட 30 விழுக்காடு கூடுதலாக ரூ.5.54 லட்சம் கோடிக்கு முதலீட்டுச் செலவுகள் மேற்கொள்ளப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் 2021-22 நிதியாண்டின் ஏப்ரல்-நவம்பர் காலகட்டத்தில், மத்திய அரசின் மூலதனச் செலவு முந்தைய நிதியாண்டை விட 13.5% மட்டுமே உயர்ந்துள்ளது, இது மதிப்பீடுகளில் 54 விழுக்காடு சரிவைக் குறிக்கிறது. ஆனால் மூலதனச் செலவின் பெரும்பகுதி ஆண்டின் இரண்டாம் பாதியில் செய்யப்படுவதாகக் கூறுகிறது பொருளாதார ஆய்வறிக்கை. .

அரசு நுகர்வு வலுவாக உள்ளதாகவும், ஆனால் தனியார் நுகர்வு இன்னும் தொற்றுநோய்க்கு முந்தைய அளவிலேயே பின்தங்கியுள்ளது என்றும் பொருளாதார ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. அரசின் மொத்தச் செலவினமும் சென்ற ஆண்டை விடக் குறைவாக உள்ளது. 2020-21ஆம் ஆண்டிற்கான சுகாதாரத் துறை, கல்வி, சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு குறைந்திருப்பதும், மத்திய அரசு அனைத்துத் துறைகளிலும் செலவுகளைக் கட்டுப்படுத்துமாறு நிர்ப்பந்திப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் 2021-22 நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 11 விழுக்காடு வளர்ச்சி பெறும் என மதிப்பிடப்பட்டிருந்தது ஆனால் புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்ட முதல் மதிப்பீடுகளில் 2021-22இல் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி 9.2 விழுக்காடாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அரசின் இறுதி நுகர்வுச் செலவினமும், தனியார் துறையின் இறுதி நுகர்வுச் செலவினமும் சென்ற ஆண்டை விடக் குறைவாக உள்ளது.

அரசு 2021-22 நிதிநிலை அறிக்கைச் செலவினத்தைக் கூடுதலாக்கியதுடன், உற்பத்தித் திறன்மிக்க மூலதனச் செலவுகளையும் கூடுதலாக்கியதாகக் குறிப்பிடுகிறது பொருளாதார ஆய்வறிக்கை. சாலை, இரயில்வேத் துறைகளை மட்டுமே உள்கட்டமைப்புத் துறைகளாக அரசு கருதுகிறது. பல்வேறு உள்கட்டமைப்புப் பிரச்சினைகளால் பொருளாதார நடவடிக்கைகள் தேக்கமடைந்துள்ளத போதும் அரசு ஒவ்வொரு ஆண்டும் உள்கட்டமைப்பை மேம்படுத்துகிறோம் என்ற பெயரில் சாலை, இரயில்வேத் துறைகளில் மட்டுமே முதலீடு செய்வதாக அறிவிப்பதும், அதனை உற்பத்தித் திறன்மிக்க முதலீடுகள் எனப் போற்றுவதுமான வேதனையூட்டும் வேடிக்கையான கேலிக்கூத்து வாடிக்கையாகி விட்டது.

2021-22ஆம் ஆண்டிலும் பொருளாதார ஆதரவு அளிக்கும் விதத்தில் பணப் புழக்கத்தைக் கூடுதலாக்கியதாகவும், உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை, கடன் உத்தரவாதத் திட்டங்கள், ஏற்றுமதிக்கு உந்துதல் அளிக்கும் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் கூறும் பொருளாதார ஆய்வறிக்கை 2022-23இல் இந்தியப் பொருளாதாரம் 8 முதல் 8.5 விழுக்காடு வரை வளர்ச்சி பெறும் என மதிப்பிட்டுள்ளது. இந்திய அரசின் நிதிப் பற்றாக்குறை, 2021 ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில் நிதிநிலை மதிப்பீட்டு இலக்குகளில் 46.2 விழுக்காடு என்றும், 2021-22இல் அரசின் வருவாய் வலுவான மீளெழுச்சி பெற்றதால் அரசு தனது இலக்குகளைச் சிறப்பாக எட்டுவதுடன், நிதி ஆதரவளித்து மூலதன செலவினங்களையும் உயர்த்த முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது..

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

வேலையின்மை விகிதம் படிப்படியாகக் குறைந்து 2020-21ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டில் 9.3 சதவீதத்தை எட்டியது என்று பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்ட போதும் அதிகரித்து வரும் வேலையின்மை ஒரு பிரச்சினையாகவே அறிந்தேற்கப்படவில்லை.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் நூறு நாள் வேலைகளுக்கான தேவை வழங்கலை விட அதிகரித்துள்ள போதும் உரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்காததாலும், நிதிப் பற்றாக்குறையாலும் பல்வேறு மாநிலங்களில் மக்கள் பாதிக்கப்பட்டனர். ஆனால் பொருளாதார ஆய்வறிக்கையோ தக்க அளவில் நிதியளிக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாகவே குறிப்பிடுகிறது.

மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், ஒடிசா, பீகார் போன்ற பல புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் மூல மாநிலங்களில் 2021ஆம் ஆண்டின் பெரும்பாலான மாதங்களில் நூறுநாள் வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 2020இல் இருந்த அளவை விடக் குறைவாக உள்ளதாகவும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அதிகம் கொண்ட பஞ்சாப், மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நூறுநாள் வேலைவாய்ப்புக்கான தேவை 2020ஆம் ஆண்டை விட 2021ஆம் ஆண்டில் பெரும்பாலான மாதங்களுக்கு அதிகமாக காணப்பட்டதாகவும், ஆதலால் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வேலைப் பிரச்சினை ஏதும் காணப்படாதது போலவும் நியாயம் கற்பிக்கிறது பொருளாதார ஆய்வறிக்கை.

<u>தனியார்மயம், பங்குவிலக்கல் குறித்துப் பொருளாதார ஆய்வறிக்கையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:</u>

1991 பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்குப் பிறகு, பொதுத்துறை, தனியார் துறை பற்றிய சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டது. 1991 இடைக்கால நிதிநிலை அறிக்கையில் முதல் முறையாக 'பங்கு விலக்கல்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும், வாஜ்பாய் பிரதமராக இருந்த போதுதான் பங்குவிலக்கல் கொள்கை ஊக்கம் பெற்றது, 1999இல் பங்குவிலக்கல் துறை புதிதாகத் தொடங்கப்பட்டது. 2001இல் பங்குவிலக்கலுக்கான முழு அமைச்சகமாக அது மாற்றப்பட்டது. இந்தக் காலகட்டத்தில்தான் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் மூலோபாய விற்பனை பற்றிய கருத்துரு கொள்கை-விவாதத்தின் ஒரு பகுதியாக மாறியது

இந்தக் காலகட்டத்தில்தான் 12 பொதுத்துறை நிறுவனங்களில் அரசுப் பங்குகள் விற்கப்பட்டன. பங்குவிலக்கல் செயல்முறை அடுத்த பத்தாண்டுகளில் 2004-2014 வரை, இடைவிடாமல் தொடர்ந்து செய்யப்பட்ட போதும், கடந்த ஐந்து ஆண்டுகளில் பங்குவிலக்கலுக்கு அதிக

முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது..

2014க்குப் பிறகு, பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று பங்குவிலக்கல் கொள்கை புதுப்பிக்கப்பட்டது. புதிய, 'தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்க வணிகத் தொழில் நிறுவனங்களில் பொதுத்துறை பங்கேற்பு மறுவரையறை செய்து அனைத்துத் துறைகளிலும் தனியார் துறை பங்கேற்பை ஊக்குவிக்கும் அவசியம் ஏற்பட்டது.

.இந்தப் பின்னணியில், ஆத்மநிர்பர் பாரதத்திற்கான புதிய பொதுத்துறை நிறுவனக் கொள்கை ஃபிப்ரவரி 4, 2021 அன்று அறிவிக்கப்பட்டது. இக்கொள்கை பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் பொதுத்துறை நிறுவனங்களில் அரசின் இருப்பைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களுக்கான புதிய கொள்கையின் கீழ், பொதுத்துறை நிறுவனங்கள் மூலோபாயத் துறை, மூலோபாயமற்ற துறை என இருவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(i) அணு ஆற்றல், விண்வெளி, பாதுகாப்பு; (ii) போக்குவரத்து, தொலைத்தொடர்பு; (iii) ஆற்றல், பெட்ரோலியம், நிலக்கரி, பிற கனிமங்கள்; (iv) வங்கி, காப்பீடு, நிதிச் சேவைகள் ஆகியவை மட்டுமே மூலோபயத் துறைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2016 முதல், 35 பொதுத்துறை நிறுவனங்கள், துணை நிறுவனங்கள், ஐடிபிஐ வங்கி ஆகியவற்றைத் தனியார்மயப்படுத்த ஒப்புதல் தரப்பட்டுள்ளது.

தனியார்மயம், பங்குவிலக்கலின் மூலம் 1.75 லட்சம் கோடி ரூபாய் திரட்ட 2021-22 நிதி நிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அரசால் 9,330 கோடி ரூபாய் (ஜனவரி 24, 2022 நிலவரப்படி) மட்டுமே திரட்ட முடிந்தது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொதுத்துறை நிறுவனக் கொள்கையும், சொத்துகளைப் பணமாக்கும் அரசின் உத்தியும் தனியார்மயமாக்கம், பங்குவிலக்கல் சார்ந்த உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

முக்கிய சொத்துகளைப் பணமாக்கும் திட்டத்தில் இதுவரை, பொதுத்துறை நிறுவனங்களின் 3,400 ஏக்கர் நிலம், பிற சொத்துகளை விற்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்காகவே தேசிய நிலப் பணமாக்க நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது எனப் பெருமை கொள்ளும் ஆய்வறிக்கை, ஏர் இந்தியாவின் தனியார்மயம் தனியார்மய நடவடிக்கைகளுக்குத் தூண்டுதல் அளிக்கும் என்றும் கூறியுள்ளது.

ஆய்வறிக்கைத் தரவுகளின் படி மொத்தப் பொருளாக்க மதிப்பில் சரக்கு சேவை வரிகளின் விகிதம் 2.6 விழுக்காட்டிலிருந்து 2.8 விழுக்காடாக உயர்ந்துள்ளது, பெருநிறுவன வரி 3.3 விழுக்காட்டிலிருந்து 2.5 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

இந்தியாவின் மூலதனச் சந்தைகள் சிறப்புறச் செயல்பட்டதாகப் போற்றும் பொருளாதார ஆய்வறிக்கை பங்குச் சந்தைகளின் ஊகப்பெருக்கத்தை உண்மையான பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட உயர்வு போல் மெச்சியுள்ளது. குஜராத்தில் உள்ள சர்வதேச நிதிச்சேவை மையத்தில் அமைந்துள்ள அலகுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு வரிச் சலுகைகள் குறித்தும் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் மொத்த வாராக் கடன் 2018-19இல் 7.5 விழுக்காடாக இருந்தது 2020இல் 6.5 விழுக்காடாகக் குறைந்துள்ளதாகவும் இந்தியாவில் 70 விழுக்காட்டினருக்கு இரு முறை கோவிட் தடுப்பு மருந்து அளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகிறது பொருளாதார ஆய்வறிக்கை.

சீனா, ஜப்பான் மற்றும் சுவிட்சர்லாந்திற்கு அடுத்தபடியாக உலகளவில் அந்நியச் செலாவணி இருப்புகள் அதிகம் வைத்திருக்கும் நாடுகளில் நான்காம் இடத்தில் இந்தியா உள்ளது எனப் பெருமிதம் கொள்ளும் பொருளாதார ஆய்வறிக்கை ஒட்டுமொத்தமாக, இந்தியாவின் பேரியல் பொருளாதார நிலைத் தன்மைக்கான குறிகாட்டிகள், 2022-23ஆம் ஆண்டின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்தியப் பொருளாதாரம் சிறப்பாக உள்ளது என்று கூறியுள்ளது.

பெருந்தொற்றால் தூண்டப்பட்ட பொருளாதார மந்தநிலை வேண்டலைக் குறைத்திருப்பினும் அதை வேண்டல்சார் பிரச்சினையாகப் பார்ப்பது சரியன்று என்று கூறுவதன் மூலம் பொருளாதாரத்தின் நிகர வேண்டலில் காணப்படும் பற்றாக்குறை ஆய்வறிக்கையால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பொருளாதாரச் சமமின்மை கோவிட்-19 தாக்கத்துக்கு முந்தைய நிலையைக் காட்டிலும் மேலும் உயர்ந்துள்ளது. மக்களின் வருவாயும், வாங்கும் திறனும் வீழ்ச்சியடைந்துள்ளது. வேலையின்மை, வறுமை, பட்டினி அதிகரித்துள்ளது. இத்தகைய பிரச்சினைகளின் இருப்பையே பொருளாதார ஆய்வறிக்கை அங்கீகரிக்கவில்லை. பிரச்சினைகளைப் பிரச்சினைகளாக அங்கீகரித்தால்தானே அவற்றிற்கான திர்வுகளை பெறுவதற்கான வழிமுறைகளை நோக்கி முன்னேற முடியும்? பிரச்சினைகளை மூடிமறைத்து இந்தியப் பொருளாதாரம் வண்ணமயமாக உள்ளது என்பது போன்ற சித்திரத்தை வழங்கும் இந்தப் பொருளாதார ஆய்வறிக்கை வழக்கம் போல் சரியான கொள்கை உருவாக்கத்திற்கான திசைகாட்டலையும், சரியான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலையும் வழங்கத் தவறி விட்டது.

## *இந்திய ஒன்றியத்தின் நிதிநிலை அறிக்கை 2022-23*

சமந்தா

*2022-23 நிதியாண்டுக்கான இந்திய ஒன்றியத்தின் நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2022, ஃபிப்ரவரி 1இல் தாக்கல் செய்தார்.*




*நிதிநிலை அறிக்கையில் அரசு அடுத்த நிதியாண்டில் தன் திட்டங்களைச் செயல்படுத்த ஒட்டுமொத்தமாகவும் துறைவாரியாகவும் எவ்வளவு நிதிஒதுக்கீடு செய்யவுள்ளது, அதற்கான வருவாயை எவ்வாறு பெறவுள்ளது என்பது குறித்த மதிப்பீடுகளை வெளியிட வேண்டியது அவசியம். அத்துடன் சென்ற நிதியாண்டில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் எவ்வளவு நிறைவேற்றப்பட்டுள்ளது, திட்டங்களை சரியாக நிறைவேற்ற முடியாவிடில் அதற்கான காரணங்கள் என்ன என்பதையும் அரசு தெளிவுபடுத்துவது நலம் பயக்கும். அவ்வாறில்லாமல் பாஜக அரசு தன் தோல்விகளையும், இயலாமையையும் மறைக்கவும், இன்றைய பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும் தொலைநோக்குத் திட்டங்கள் என்ற பெயரில் நீட்டி முழக்குவதன் மூலம் தன் சந்தர்ப்பவாத அரசியலைக் காக்க முடியாது. இன்றைக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், இடர்பாடுகளையும் கண்டு கொள்ளாதவர்கள் 25 ஆண்டு தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை வகுத்து அறிவித்துள்ளனராம், அதை நாமும் நம்பவேண்டுமாம்! இந்த ஆண்டில் நாங்கள் எதுவுமே*

*செய்யப் போவதில்லை என்பதிலிருந்து திசைதிருப்ப நடத்தப்படும் கண்துடைப்பு நாடகம்தான் இது.*

*இந்தியாவின்* 100ஆவது சுதந்திர தினத்தைக் *முன்னோக்கி*, நீண்டகாலத் திட்டங்களுக்காக நான்கு முக்கியத் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் *என்று நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.* அவை*யாவன:* பிரதமர் கதிசக்தி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, உற்பத்தி மேம்பாடு, முதலீடு, புதிய வாய்ப்புகள், *கால*நிலைச் *செயல்பாடாக* எரி*யாற்றல்* திட்டம், முதலீட்டிற்கான நிதி.

2022-23 நிதியாண்டிற்கான, மூலதனச் செலவினத்திற்கு சென்ற ஆண்டைவிட 35.4% கூடுதலாக ரூ. 7.5 இலட்சம் கோடி நிதி ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டிலும் இதே போல் மூலதனச் செலவிற்கு 34% கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் அதில் 50 விழுக்காட்டிற்கும் குறைவாகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனும் போது, வரும் நிதியாண்டில் 35.4% கூடுதலாக மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. 2021-22 நிதியாண்டின் மூலதனச் செலவினத்தின் திருத்திய மதிப்பீடு ரூ. 6.03 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் ஏர் இந்தியாவின் நிலுவையிலுள்ள கடன்தொகை ரூ. 51,971 கோடியும் அடங்கும். இதை எவ்விதத்தில் மூலதனச் செலவு என ஏற்றுக் கொள்ள முடியும்?.

2021-22 *நிதியாண்டிற்கான செலவினம்* ரூ.34.83 இலட்சம் கோடியாக மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில் திருத்திய மதிப்பீடுகளில் ரூ.37.70 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 2021-22ன் ஏப்ரல்-நவம்பர் காலக்கட்டத்தில் அரசு மேற்கொண்ட மொத்த செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டதில் 60 விழுக்காட்டிற்கு குறைவாகவும், இதே காலக்கட்டத்தில் அதற்கு முந்தைய ஆண்டில் செய்யப்பட்ட செலவினத்தை விடக் குறைவாகவும் உள்ள நிலையில் இரு மாதங்களில் எஞ்சிய தொகை முழுவதும் செலவு செய்யப்படும் என்பது நம்பத்தகுந்ததாய் இல்லை.

2022-23ஆம் நிதியாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூ.39.45 இலட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2022-23-ல் கடன் தவிர்த்த மொத்த வரவுகள் ரூ.22.84 லட்சம் கோடியாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. 2022-23-ம் நிதியாண்டின் செலவினங்களுக்காக, மத்திய அரசு ரூ.11.6 இலட்சம் கோடி கடன் வாங்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

2022-23ஆம் நிதியாண்டிற்கான அரசின் மொத்த வருவாயில் வரிவருவாய் 58 விழுக்காடும் பங்குவிலக்கல் 2 விழுக்காடும், வரியில்லா வருவாய் 5 விழுக்காடும், கடன் 35 விழுக்காடும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது..

நடப்பு நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை மதிப்பிடப்பட்ட 6.8 விழுக்காட்டை விட 0.1 விழுக்காடு கூடுதலாக 6.9% உயரும் எனத் திருத்தப்பட்டுள்ளது. நிதியாண்டு 2022-23இல் நிதிப் பற்றாக்குறை 6.4 விழுக்காடாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2025-26க்குள் 4.5 விழுக்காட்டிற்கும் குறைவாக நிதிப் பற்றாக்குறையைக் குறைக்கும் நிதி ஒருங்கிணைப்பிற்கு வழிவகுக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது..

25 ஆண்டு தொலைநோக்குப் பார்வையுடன் பல திட்டங்களை அறிமுகப்படுத்திய பாஜக அரசு ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளைக் குறைத்து தன் மக்கள்விரோதப் போக்கை மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தியுள்ளது.
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை நகர்ப்புறங்களிலும் நடைமுறைபடுத்த வேண்டும் எனப் பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் அதை அலட்சியம் செய்த பாஜக அரசு சென்ற நிதியாண்டை விட 34.2 விழுக்காடு குறைத்து 73,000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது..

நடப்பு நிதியாண்டில் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் உணவு, உரம், பெட்ரோலியப் பொருட்களுக்கு மத்திய அரசு தரும் மானியம் ரூ. 4,33,108 கோடியாக 39% குறைந்துள்ளது. 2022-23 நிதியாண்டிற்கான மதிப்பீடுகளில் இந்த மானியம் மேலும் 27% குறைக்கப்பட்டு ரூ.3,17,866 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும் என்று எளிய மக்களை வஞ்சித்துள்ளது பாஜக அரசு. உர மானியம் 2021-22ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட 25 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. உணவு மானியம் 28 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. பெட்ரோலியத்திற்கான மானியம் 10 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. கிராம மேம்பாட்டுத் துறைக்கான ஒதுக்கீட்டில் 0.31 விழுக்காடு சரிவு ஏற்பட்டுள்ளது. சுகாதாரத் துறைக்கு சென்ற ஆண்டை விட 0.8 விழுக்காடு மட்டுமே கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.
*ஒட்டுமொத்தமாக, விவசாய ஆராய்ச்சி, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளம் உள்ளிட்ட*

*வேளாண்துறைக்கு 2021-22இல் ₹1.35 இலட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2022-23இல் வேளாண்துறைக்கு சென்ற ஆண்டை விட வெறும் 2 விழுக்காடு கூடுதலாக ₹1.38 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கு 3 விழுக்காடு குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி ஃபசல் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்திற்கு 43 விழுக்காடு குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உணவு தானியக் கொள்முதலுக்கு 20 விழுக்காடு குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்திற்கு 15 விழுக்காடு குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது..

2021-22 நிதியாண்டில் பங்குவிலக்கல் மூலம் 1.75 லட்சம் கோடி திரட்டப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில் மத்திய அரசால் வெறும் 9,364 கோடி ரூபாய் மட்டுமே திரட்ட முடிந்தது மகிழ்ச்சியான செய்தி என்ற போதும், திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் பங்குவிலக்கல் இலக்கு 78,000 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2022-23இல் பங்குவிலக்கல் மூலம் 65,000 கோடி ரூபாய் திரட்டப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த முதலீடுகளை ஊக்குவிப்பதில் மாநிலங்களுக்கு உதவ 2022-23இல் ரூ.1 இலட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 50 ஆண்டுகளுக்கு வட்டியில்லாக் கடன்கள் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு முக்கியமாக பிரதமரின் 'கதிசக்தி' திட்டத்திற்கே பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து கருத்து தெரிவித்த தமிழ்நாட்டின் நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு அளித்து வந்த திட்ட நிதிகளையும், மானியங்களையும் குறைத்தே இத்தகைய திட்டத்தை உருவாக்கியிருப்பதாகக் கூறியுள்ளார். சமீப காலங்களில் மத்திய அரசு மூலதனச் செலவுகளை கூடுதலாகக் காண்பிக்க வருவாய்ச் செலவினங்களைக் குறைத்து நிதிநிலை அறிக்கையில் ஆக்கவழிக் கணக்கீட்டு முறையை (creative accounting) பின்பற்றுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்..

*மாநிலங்களின் நிதிப்பற்றாக்குறைக்கான வரம்பு 4 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. அதில் 0.5 விழுக்காடு... மின்துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டது. மாநிலங்களின் உரிமைகளை அபகரிக்கும் விதமாக, ஒரே நாடு ஒரே ஆவணப் பதிவு' என்ற*

*திட்டத்தின் கீழ் அனைத்து* நில ஆவணங்களும் *டிஜிட்டல் முறையில்* மேலாண்மை *செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சிறு குறு நடுத்தர* நிறுவனங்களுக்கு அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டத்திற்கு (ECLGS) ரூ.50,000 கோடி உயர்த்தப்பட்டு மொத்தம் ரூ. 5 லட்சம் கோடியாக விரிவுபடுத்தப்படும் *என்றும், இத்திட்டம்* 2023ஆம் ஆண்டு மார்ச்சு வரை நீட்டிக்கப்படவுள்ளது. கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 50,000 கோடி ரூபாய் உணவகம், சுற்றுலா சார்ந்த சேவைத் துறைகளுக்கு மட்டுமே அளிக்கப்படும். சிறு, குறு நிறுவனங்ளுக்கான கடன் உத்தரவாத அறக்கட்டளையின் (CGTMSE) கீழ் சிறு குறு நிறுவனங்களுக்கு ரூ. 2 இலட்சம் கோடி கூடுதல் கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் 75 விழுக்காட்டினர் மத்திய அரசின் திட்டங்களின் கீழ் கடன் பெறுவது மிகக் கடினமாக உள்ளதாகவே பதிலளித்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

2022-23இல் தேசிய நெடுஞ்சாலைக் கட்டமைப்பு 25,000 கிலோ மீட்டர் தொலைவுக்கு விரிவாக்கப்படும். தேசிய நெடுஞ்சாலைக் கட்டமைப்பு விரிவாக்கத்திற்கான ரூ.20,000 கோடி திரட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 இலட்சம் அஞ்சல் அலுவலக சேமிப்பகங்கள் முகமை வங்கி அமைப்புக்குள் *கொண்டுவரப்பட்டு வங்கிகளுக்கிடையிலான பரிவர்த்தனை எளிமைபடுத்தப்படும் என்றும்* இதன்மூலம் எங்கிருந்தும் அஞ்சலகக் கணக்குகளை இயக்கிக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

*ஏற்றுமதியை ஊக்குவிக்க சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் மாநிலங்களையும் பங்குதாரரர்களாக்க* சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டத்துக்கு மாற்றாக புதிய சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

2022-23 உள்நாட்டுத் தொழில்நுட்பம் மற்றும் திறன் உயர்வுக்கு கவாஜ் திட்டத்தின் கீழ் 2,000 கிலோ மீட்டர் இரயில்வே கட்டமைப்பு கொண்டுவரப்படும் எனவும், அடுத்த 3 ஆண்டுகளில் 400 புதிய தலைமுறை 'வந்தே பாரதம்' ரயில்கள் தயாரிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலிக்கு உதவும் வகையில், ஒரு இரயில் நிலையம், ஒரு பொருள் என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் என்றும், அடுத்த 3 ஆண்டுகளில் பன்மாதிரி சரக்குப் போக்குவரத்துக்கான 100 பிஎம் கதிசக்தி சரக்கு முனையங்கள்

உருவாக்கப்படும் என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

2022-23இல் *பாதுகாப்புத் துறைக்கான* மூலதனக் கொள்முதலில் உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களிடமிருந்து 68% கொள்முதல் செய்ய *இலக்கு* நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் இரசாயனக் கலப்பற்ற இயற்கை வேளாண்மை மேம்படுத்தப்படும். கங்கை நதியின் குறுக்கே 5 கிலோமீட்டர் அகல வழித்தடத்தின் விவசாய நிலங்களில் முதலில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான பரம்பரகத் கிரிஷி விகாஸ் யோஜனா திட்டத்திற்கு ₹450 கோடி (2021-22 பட்ஜெட் மதிப்பீடு) ஒதுக்கப்பட்டது, ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் படி அந்த ஆண்டில் வெறும் ₹100 கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. தற்போது அத்திட்டம் உற்பத்தித் திறனையும் விவசாயிகளின் வருமானத்தையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா என்ற குடைத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டதிலிருந்து 2022-23ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்துக்கு எவ்வளவு பெறப்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

உதயம், இ-ஷ்ரம், என்சிஎஸ் மற்றும் அசீம் (ASEEM) இணையதளங்கள் ஒன்றாக இணைக்கப்*பட*வுள்ளன.

பிரதமரின் இ-வித்யா திட்டத்தின் ‘ஒரு வகுப்பு -- ஒரு டி.வி சேனல்’ அனைத்து மாநில மொழிகளிலும் ஒளிபரப்புமாறு 200 டி.வி சேனல்களாக விரிவுபடுத்தப்படும் என்றும் டிஜிட்டல் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படும் என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது..

*வீடுகளுக்குக்* குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 2022-23ஆம் ஆண்டில் 3.8 கோடி வீடுகளுக்கு இணைப்பு வழங்க ரூ.60,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

*பாரத் நெட் திட்டத்தின் மூலம் அனைத்துக் கிராமங்களிலும் இணைய வசதி கிடைக்கும்படி செய்யப்படும் என்றும், 2025ஆம் ஆண்டுக்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் இணைய வசதி கிடைக்க வழிவகை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது..*

பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2022-23ஆம் ஆண்டில் 80 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்க *வெறும்* ரூ.48,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்னணுச் சில்லுகள் பொருத்திய மின்- கடவுச்சிட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பசுமைக் கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி திரட்ட பசுமை *நிதி*ப் பத்திரங்கள் வெளியிடப்படும்

என்றும் 2022-23 முதல் இந்தியத் *தலைமை* வங்கியின் டிஜிட்டல் *மின்ம* ரூபாய் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*பயிர் வகைகளை மதிப்பீடு செய்யவும், நில ஆவணங்களைச் சரிபார்க்கவும், பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டைக் கண்காணிக்கவும் 'ட்ரோன்' தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*விவசாய நிலங்களில் அறுவடைக்குப் பின் விவசாயக் கழிவுகளை எரிக்காமல் உயிரி உருண்டைகளாக மாற்றி, அனல்மின் நிலையங்களில் ஆண்டுக்கு 38 மில்லியன் மெட்ரிக் டன் கரியமில வாயுவைக் குறைக்க 5-7% உயிரி உருண்டைகள் இணை எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

ஏவிஜிசி (AVGC) ஊக்குவிப்புக் குழு: அனிமேஷன், விஷூவல் எபெக்ட்ஸ், விளையாட்டு மற்றும் காமிக்ஸ் ஆகியவற்றின் ஊக்குவிப்புக்கு இத்துறையில் தனிக் குழு உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரத்தில், வெளிநாட்டுப் பல்கல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் தொடங்க அனுமதிக்கப்படும் என்றும், பூசல்களுக்குக் குறித்த காலத்திற்குள் தீர்வு காண ஏதுவாக சர்வதேசப் பூசல் தீர்வு மையம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் வரிப் புகலிடமாகச் செயல்படும் விதத்தில் குஜராத் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரத்தின் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முற்றிலும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது அங்கே செயல்படும் நிறுவனங்களின் வரி 15 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது..

2022-23ல் 5ஜி அலைக்கற்றை ஏலம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*நாட்டில் 5 பெரிய நதிகள் இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

நதிநீர் இணைப்பு பற்றிப் பேசிய சுற்றுச்சூழல் துறை முன்னாள் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், ஒருபுறம் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதி அளித்து விட்டு, மறுபுறம் பேராபத்தை ஏற்படுத்தும் நதிநீர் இணைப்புத் திட்டங்கள் பற்றி அறிவித்து மோடி அரசு அழிவுப் பாதையில் செல்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொடக்க நிறுவனங்களுக்கான வரிச் சலுகைகளைப் பெறுவதற்கான கால அவகாசமும் 2023ஆம்

ஆண்டு மார்ச் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகைத் திட்டத்தின் கீழ் 14 துறைகளில் 60 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை பெரும்பாலும் அதிக வேலைவாய்ப்பு அளிக்காத மூலதனச் செறிவு மிகுந்த பெருநிறுவனங்களுக்கே அளிக்கப்படும் நிலையில் இது வெறும் வெற்று வாய்ச் சவடால் அறிவிப்பே.

கூட்டுறவுச் சங்கங்களுக்கான குறைந்தபட்ச வரி 15 விழுக்காடாகவும், ரூ.1 கோடிக்கு மேல் ரூ. 10 கோடி வரை மொத்த வருமானம் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான கூடுதல் வரி 7 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சகி இயக்கம், வாத்சல்யா, ஊட்டச்சத்து 2.0 என்கிற மூன்று திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன..

மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்கள் / காப்பாளர்களின் வாழ்க்கைக் காலத்தில், அதாவது பெற்றோர்கள் / காப்பாளர்கள் 60 வயதை அடையும் போது, அவர்களைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்குக் காப்பீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கும் வருடாந்தரத் தொகை அல்லது மொத்தத் தொகை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படும்.

*மாநில* அரசு ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் செலுத்தப்படும் வரிப்பிடித்த வரம்பு 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.

31.03.2024 வரை புதிதாகத் தொடங்கப்படும் உற்பத்தி நிறுவனங்களுக்கான வரி 15 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கிரிப்டோ நாணயங்களில் முதலீடு செய்வதை தடைசெய்ய நாடாளுமன்ற மசோதா எதுவும் இது வரை அறிமுகப்படுத்தப்படாத நிலையில் மெய்ந்நிகர் டிஜிட்டல் சொத்துக்களின் பரிவர்த்தனைகளுக்கு 30 விழுக்காடு வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு மெய்ந்நிகர் டிஜிட்டல் சொத்துப் பரிமாற்றத்திலிருந்தும் கிடைக்கும் வருவாய்க்கு 30 சதவீத விகிதத்தில் வரி விதிக்கப்படும். மெய்ந்நிகர் டிஜிட்டல் சொத்துப் பரிமாற்றம் தொடர்பாக வழங்கப்பட்ட தொகைக்கு ஒரு சதவீத அளவிற்கு டிடிஎஸ் (வருவாயிலிருந்து வரிப்பிடித்தம்) பிடித்தம் செய்யப்படும்.

*பட்டியலப்பட்ட நிறுவனங்களின் பங்கு முதலீடுகளின்* நீண்டகால மூலதன இலாபங்கள் மீதான

துணை வரி 15 விழுக்காடு உள்ளது. தற்போது *பட்டியலிடப்படாத நிறுவனங்களின் பங்கு முதலீடுகளின்* நீண்டகால மூலதன இலாபங்கள் மீதான துணை வரியும் 15 விழுக்காட்டிற்குக் குறைக்கப்பட்டுள்ளது

புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக வருவாய், இலாபங்கள் மீதான துணை வரி வர்த்தக செலவாக அனுமதிக்கப்பட மாட்டாது.

வணிக மேம்பாட்டு முகவர்களுக்கு வழங்கப்படும் பணப் பயன்களின் மொத்த மதிப்பு ரூ. 20,000ஐக் கடக்கும் போது வரிப்பிடித்தம் செய்யப்படும்..

கைபேசி மின்னூக்கிகள், மின்மாற்றி, கைபேசி கேமராவுக்கான கேமரா லென்ஸ் ஆகியவற்றிற்கு இறக்குமதிச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

மின்னணுப் பொருட்கள் உற்பத்தியை உள்நாட்டில் ஊக்குவிக்க… அணியக் கூடிய உபகரணங்கள், கேட்கும் உபகரணங்கள், மின்னணு ஸ்மார்ட் மீட்டர்கள் ஆகியவற்றின் இறக்குமதி வரிகள் திருத்தியமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடைகள் மீதான இறக்குமதி வரி 20 விழுக்காடாக உயர்த்தப்படுகிறது. குடைகளுக்கான பாகங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை திரும்பப்பெறப்படுகிறது. இரும்புக் கழிவுகளுக்கு இறக்குமதி விலக்களிக்கப்படுகிறது. துருப்பிடிக்காத எஃகு, இரும்புக் கம்பிகள், உலோகக் கலவை எஃகு மீதான எதிர்வரி நீக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பின் மீது எவ்வித அக்கறையும் செலுத்தாத பாஜக அரசு வைர வியாபரிகள் மீது அதீத அக்கறை காட்டியுள்ளது. பட்டை தீட்டப்பட்ட வைரங்கள் மற்றும் வைரக்கற்கள் மீதான சுங்கத் தீர்வை 5 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. வைரங்கள் மற்றும் நகைப்பிரிவை ஊக்குவிக்கும் வகையில்… அறுக்கப்பட்ட வைரங்களுக்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

*அதிகரித்துள்ள சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க பாஜக அரசு எந்த முன்னெடுப்பும் மேற்கொள்ளவில்லை. அரசின் மொத்த வரி வருவாயில் சுற்றடியான வரிகளின் பங்கைக் குறைத்து நேரடி வரிகளின் பங்கை அதிகரித்து எளிய மக்கள் மீதான வரிச் சுமையைக் குறைக்க வேண்டும் என்பது நெடுங்காலமாக இடதுசாரி அமைப்புகளால் முன்வைக்கப்படும்*

*கோரிக்கை. ஆனால் பாஜக அரசோ வரியமைப்பில் முற்போக்கான சீர்திருத்தங்களைக் கொண்டுவரத் தவறியுள்ளது. .*

பெருநிறுவனங்கள் மீதான வரியை உயர்த்தாமல் அவற்றின் மீதான கூடுதல் வரியை 12 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காடாகக் குறைத்துள்ளது பாஜக அரசு.
மெய்நிகர் சொத்துக்களுக்கு வரிவிதித்திருப்பது வரவேற்கத்தக்கதே. ஆனால் கண்ணுக்கெதிரே பெருஞ்செல்வந்தர்கள் எக்கச்சக்கமான சொத்துக்களைக் குவித்துவைத்துள்ளனர். அவற்றின் மீது வரிவிதிப்பது குறித்து எந்தப் பேச்சும் இல்லை. பெருஞ்செல்வந்தர்களின் பாதுகாவலனாக சொத்துவரியை நீக்கிய பாஜக அரசு மீண்டும் சொத்துவரியை அறிமுகப்படுத்த விரும்பவில்லை. பெட்ரோல், டீசல் விலையைக் குறைப்பது குறித்தும் எந்த அறிவிப்பும் இல்லை. .

*ஜனவரி மாதத்தில் ஒட்டுமொத்த சரக்குசேவை வரிவசூல் இது வரையில்லாத அளவிற்கு 1,40,986 கோடி ரூபாயாக உச்சமடைந்துள்ளது எனப் பெருமை கொண்ட நிதியமைச்சர் மாநிலங்களுக்கு சரக்குசேவை வரி நிதியிழப்பீட்டுத் தொகையை நீட்டிப்பது குறித்து எந்த உத்தரவாதமும் அளிக்கவில்லை. விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை அளிக்க வேண்டும். ஆனால் விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச ஆதரவைக் கூட அளிக்காமல் வஞ்சித்துள்ளது பாஜக அரசு..*

இந்தியாவில் வேலையின்மைப் பிரச்சினை அதிகரித்துள்ளதே தவிர குறைந்தபாடில்லை. மக்கள் வருவாய்க் குறைவால் அவதிப்படுகிறார்கள். விலைவாசி உயர்வு மக்களின் வாங்கும் சக்தியை மேலும் குறைத்துள்ளது. விரைவில் விற்பனையாகும் நுகர்வுப் பொருட்களின் துறைக்கான வேண்டலை ஊக்குவிக்க மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்தும் விதத்தில் மக்களுக்குப் பணம் கொடுங்கள் என அத்துறை சார்ந்தவர்களும், பொருளியலாளர்களும் கோரிக்கை வைத்திருந்தனர். அதற்கும் செவிசாய்க்காத பாஜக அரசு மக்களுக்கோ, விவசாயிகளுக்கோ, சிறு, குறு நிறுவனங்களுக்கோ உதவாமல், வழக்கம் போல் வாய்ச்சவடால்கள் செறிந்த நிதிநிலை அறிக்கையையே அளித்துள்ளது.

..

# ஐக்கிய நாடுகள் அவையின் வரி நெறிமுறை

## (UN TAX CONVENTION)

சமந்தா




சர்வதேச அளவில் நாடுகளுக்கிடையே பொருளாதார ஒப்பந்தங்கள் உருவாக்கப்படும் போது, இருமுறை வரிவிதிப்பதைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய உடன்படிக்கைகள் வளரும் நாடுகள் / ஏழை நாடுகளின் வரிவிதிக்கும் உரிமையைப் பறிப்பவையாக உள்ளன. ஏனென்றால் பெரும்பாலும் இத்தகைய உடன்படிக்கைகள் பொருளாதார ஒருங்கிணைப்பு, வளர்ச்சிக்கான அமைப்பின் வரி மாதிரியை (OECD Tax Model) அடிப்படையாகக் கொண்டவை.

பொருளாதார ஒருங்கிணைப்பு, வளர்ச்சிக்கான அமைப்பின் வரி அமைப்பு (OECD Tax Model) பெரும்பாலும் ஒரு நிறுவனத்தின் வருவாய் சென்றடையும் நாட்டில் வரிவிதிப்பதை அனுமதிக்கிறதே (Resident Country Taxing) தவிர அந்நிறுவனத்தின் வருவாய் உருவாக்கப்படும் நாட்டில் வரிவிதிப்பதை அனுமதிப்பதில்லை. ஆகவே இந்த வரிமுறை வளர்ந்த நாடுகளுக்கே சாதகமாக அமைந்துள்ளது. ஏனெனில் வளர்ந்த நாடுகள் பெருமளவில் மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக உள்ளன. மூலதன ஏற்றுமதியில் கிடைக்கும் வருவாயைப் பெறும் வளர்ந்த

நாடுகளே அதன் மீது வரிவிதிக்கும் உரிமையைப் பெறுகின்றன. ஆகவே இத்தகைய வரிமுறையால் வளரும் / ஏழை நாடுகள் வரிவிதிக்கும் உரிமையை இழப்பதால் பாதிக்கப்படுகின்றன. இந்தக் குறைபாட்டையும் பாரபட்சமான அனுகுமுறையையும் களையும் விதத்தில் ஐக்கிய நாடுகள் வரி நெறிமுறை (UN Tax Convention) உருவாக்கப்பட்டது. இது வருவாய் உருவாக்கப்படும் நாட்டிற்கு வரிவிதிக்கும் உரிமையை வழங்குவதால் (Source Country Taxing) மூலதனம் இறக்குமதி செய்யும் நாடுகள் மூலதன வருவாய் மீது வரிவிதிப்பதை அனுமதிக்கிறது.

*வரி நீதிக்கான வலையமைப்பு கூறுகிறது: ஐ.நா. வரி ஒப்பந்தத்தை உலகெங்கும் கடைபிடிக்கச் செய்வது சமமான சர்வதேச வரி விதிகள் உண்மையான பிரதிநிதித்துவச் செயல்முறை மூலம் நிறுவப்பட்டு சட்டப்பூர்வமாகப் பிணைக்கப்படுவதை உறுதி செய்யும், வரி தொடர்பான ஐநா நெறிமுறையானது... நிறுவன வரிவிதிப்பு, நிதி வெளிப்படைத்தன்மை, வரிநீதி ஆகியவற்றைச் சட்டப்பூர்வமாகப் பிணைப்பதுடன், நாடுகளுக்குச் சமமான தரநிலைகள் அளிக்க முடியும்.*

*குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம், சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தம் போன்ற ஐ.நா. ஒப்பந்தங்கள் சர்வதேச ஒப்பந்தங்களாகும், அதில் நாடுகள் கையெழுத்திட்டு, அங்கீகரிப்பதன் மூலம் அவை சர்வதேசச் சட்டத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட உடன்படுகின்றன. அதே போல் ஐ.நா நெறிமுறையையும் அனைத்து நாடுகளும் அங்கீகரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.*

கடந்த 100 ஆண்டுகளாக, சர்வதேச வரி விதிகள் முதன்மையாகப் பொருளாதார ஒருங்கிணைப்பு, வளர்ச்சிக்கான அமைப்பால் (OECD) தீர்மானிக்கப்படுகிறது, இது பணக்கார நாடுகளின் ஒரு சிறிய குழு ஆகும்; அவற்றில் உலகின் மிகப் பெரிய வரிப் புகலிடங்கள் உள்ளன. இந்த அமைப்பு கொண்டுவந்த உலகளாவிய வரிமுறையால் உலகெங்கிலும் உள்ள நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் $427 பில்லியனுக்கும் அதிகமான வரியைப் பெருநிறுவன வரி மோசடி, தனியார் வரி ஏய்ப்பு ஆகியவற்றால் இழக்கின்றன. இந்த வரி இழப்புகளில் கிட்டத்தட்டப் பாதி அளவுக்குப் பொருளாதார ஒருங்கிணைப்பு, வளர்ச்சிக்கான அமைப்பின் நாடுகளே (OECD) பொறுப்பு என்று பகுப்பாய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது. தற்போதைய சர்வதேச வரிவிதிகள் வேலை செய்யவில்லை என்பதை அவ்வமைப்பு ஒப்புக் கொண்டாலும், அர்த்தமுள்ள சீர்திருத்தங்களை வழங்குவதற்கான அதன் சமீபத்திய முயற்சிகள் சக்திவாய்ந்த உறுப்பு நாடுகளின் அழுத்தத்தால் தோல்வியடைந்துள்ளன.

ஐநா வரி நெறிமுறை மிகவும் அவசியமானது. இது பணம்படைத்தவர்களும்

சக்திவாய்ந்தவர்களுமான சிலரின் விருப்பங்களுக்குப் பதிலாக உலகெங்கிலும் உள்ள நாடுகளின் தேவைகளைப் பிரதிபலிக்கும்.

கோவிட்-19 பொருளாதார மந்தநிலையிலிருந்து சமூகத்தைக் காப்பதற்கான முக்கியப் பரிந்துரைகளில் ஒன்றாக உடனடியாக வரி நெறிமுறைகளை அமைக்கும் பொறுப்பைப் பொருளாதார ஒருங்கிணைப்பு, வளர்ச்சிக்கான அமைப்பிடமிருந்து (OECD) ஐக்கிய நாடுகள் அவைக்கு (UN) மாற்றுவதற்கு வரி நீதிக்கான வலையமைப்பு அழைப்பு விடுத்தது.

ஐக்கிய நாடுகளின் நிதிப் பொறுப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு (FACTI) குழுவின் முக்கியப் பரிந்துரைகள் பின்வருமறு: ஐ.நா. வரி நெறிமுறையைச் செயல்படுத்துதல், சர்வதேச வரி விதிகளில் மேலும் மாற்றங்களை உருவாக்கும் பொருட்டு உடனடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தேச அரசுகளுக்கிடையேயான ஐ.நா. மன்றத்தை உருவாக்குதல். சட்டவிரோத நிதிப் பாய்ச்சல்கள், வரி மோசடி குறித்த தேசிய பொறுப்புணர்வை உருவாக்குவதற்காக ஐ.நா.வில் வரிவிதிப்பு உரிமைகளைக் கண்காணிப்பதற்கான ஒரு மையத்தை நிறுவதல், பெருநிறுவனங்கள் மீது குறைந்தபட்சம் 25 விழுக்காடு வரி விதித்தல் ஆகியவையும் இப்பரிந்துரைகளில் அடங்கும்.

## இந்தியாவின் நிலை

வரி நீதிக்கான வலையமைப்பு (Tax Justice network) சமூகத்தில் அனைவரின் தேவைகளுக்கும் சமமான மதிப்பைக் கொடுக்கும் ஒரு நீதியான சமுதாயத்தை உருவாக்குவதற்கு நம் வரியமைப்புகளும், நிதி அமைப்புகளும் மிகவும் சக்திவாய்ந்த கருவிகள் என்று கருதுகிறது. வரி அமைப்பில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவரச் சீர்திருத்தங்களை வலியுறுத்திப் பரவலாக விழிப்புணர்வு உருவாக்கும் விதத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு இந்தியாவின் செயல்பாடு குறித்து அளித்த மதிப்பீடுகள் பின்வருமாறு:

நிதிமுறை இரகசியத்திற்கான குறியீட்டின் தரவரிசையில் உலகளவில் இந்தியா 47ஆம் இடத்தில் உள்ளது. வரிப் புகலிடங்களால் இந்தியாவிற்கு ஆண்டுதோறும் $16,830,271,368 [டாலர்] நிதியிழப்பு ஏற்படுகிறது.

இந்தியாவால் மற்ற நாடுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் வரியிழப்பு சுழியம் எனவும், பெருநிறுவன வரிப்புகலிடத்திற்கான குறியீடு இந்தியாவுக்குப் பொருந்தாது எனவும் வரி நீதிக்கான வலையமைப்பு குறிப்பிட்டுள்ளது.